கைத்தறி

ஆசிரியர்: எம். கே. சாமி.

மாதப் பத்திரிகை ★ விலை அணா நான்கு

தறி 2	கோவை, 15—8—1951	பாவு 10

உயர்வான
சாய, அச்சு வேலைகளுக்கு
★
சென்னை சர்க்காராலும்
மதராஸ் கைத்தறி நெசவாளர்
மாகாண கூட்டுறவு சங்கத்தாலும்
அங்கீகாரம்பெற்ற
ஸ்ரீவெங்கடேசா
கலர் ஒர்க்ஸ்,
76, மிஷின் தெரு,
திருப்பூர் P. O.

CONNEMARA PUBLIC LIBRARY
29 MAY 1955
MADRAS

60-ம் நெம்பர் நூல் விற்காததற்கு,

சென்ற இரண்டு மாதங்களாகவே சேலம், மதுரை, கோவை போன்ற ஜில்லாக்களில் உள்ள நூல் வியாபாரிகள் தாங்கள் ஸ்டேட் நாமினியிடமிருந்து பெறுகிற 50, 60 நெ. நூலைத் தறிகாரர்கள் வாங்குவதில்லையென்றும், நூல் கையிருப்பில் தங்களிடம் இருக்கும்போதே மேற்கொண்டும் அலாட்மெண்ட் போடுவதால் அதைக் கொள்முதல் செய்ய முடிகிறதில்லையென்றும் சம்பந்தப்பட்ட ஜில்லா அதிகாரிகளிடம் புகார் செய்து வருகிறார்கள்.

கோவை ஜில்லாவில் ஒரு ராஜ்யநாமினிக்கு 60 நெ. நூல் பேல் வந்து சுமார் இரண்டுமாதமாகின்றது. அந்த பேல் நூலை முதலில் ஒரு சில்லரை நூல் விற்பனையாளருக்குஜில்லா கண்ட்ரோல் ஆபீஸர் அலாட்மெண்ட் போர்டார் அதுவும் 60 நெ. நூல் பெரும்பாலும் தேவையாக உள்ள பொள்ளாச்சித்தாலுக்காவுக்கு. குறிப்பிட்ட நூல் வியாபாரி அதை எடுத்துக்கொள்ளாததால் வழக்கம்போல் 6-வது நாள் அந்த பேல் "லேப்ஸ்" ஆகிவிட்டதாக ஜில்லா டெக்ஸ்டைல் கண்ட்ரோல் ஆபீசருக்கு அந்த ராஜ்ய நாமினி அறிவித்தார்.

மீண்டும் ஆபீசர், அதே தாலுக்காவில் உள்ள இன்னொரு நூல் லைசென்சுதாரருக்கு "லேபஸ்" ஆகிவிட்ட பேலை அலாட்மெண்ட் போட்டார். இந்த வியாபாரி புத்திசாலித்தனமாக அந்த விற்காத நூல்பேலைத் தன் "தலைமேல் சுமத்தவேண்டாம்" என ராஜ்யநாமினிக்கும், கண்ட்ரோல் ஆபீஸருக்கும் எழுத்து மூலமாக அறிவித்துவிட்டார்.

இதற்கிடையில் ஒரு நூல் வியாபாரியை டி.ஆர்.ஐ. மிரட்டி அலாட்மெண்டை எடுத்துக் கொள்ளவில்லையெனில் லைசென்ஸையே ரத்து செய்துவிடுவேன் என்று பயமுறுத்தவே 60 நெ, கோன் (தொப்பி) நூல் ஒரு பேலையும் டெலிவரி எடுத்துக்கொண்டார். இப்பொழுது இரண்டு மாதங்களாகியும் "அது விற்கமாட்டேன் என்கிறது. இதற்கு ஏதாவது வழி செய்தால் தேவலை. இல்லையானால் சுமார் 800 ரூபாய் நஷ்டமாய் விடும்" என அந்த நூல் வியாபாரி கண்ட்ரோல் ஆபீஸரிடம் முறையிடுகிறார்.

கண்ட்ரோல் ஆபீஸரோ நான் என்ன செய்யட்டும், சென்னை கட்டுப்பாடுபொருள்கள்டைரக்டருக்கு விஷயத்தைத் தெரிவித்து முடிந்ததைச் செய்கிறேன் என கையை விரிக்கிறார். இதே நிலைமைதான் பல ஜில்லாக்களிலும் இருந்து வருகிறது.

சேலம் கலெக்டரின் திடமான நடவடிக்கையை எடுத்துச் சொன்னாலும் காதில் புக கஷ்டமாக இருக்கிறது கண்ட்ரோல் ஆபீஸருக்கு என நமது சாரியாலயத்திற்குவரும் நூல் வியாபாரிகள் முறையிடுகிறார்கள்.

நெசவாளியா பொறுப்பு?

இந்த டி. ஆர். ஐ. புண்ணியவான்கள் வேறு, தங்களின் அதிகார வரம்புக்கும்மீறி நூல் வியாபாரிகளை மிரட்டுகிறார்களாம் போட்ட அலாட்மெண்டை எடுக்கச் சொல்லி. இந்த குட்டி அதிகாரிகளுக்கு வந்திருக்கும் மவுசு இருக்கிறதே அது எதற்கோ குஞ்சம் கட்டினால் என்று சொல்லுகிறார்களே அது போலிருக்கிறது.

இப்படி திடீரென்று நூல் நிலைமையில் ஏற்பட்டுள்ள தாறுமாறான தலைகீழ் மாற்றத்திற்கு காரணம் என்ன? மில்களில் கைத்தறிகளுக்குத் தேவையான 20 நெம்பர் நூல் தேவையான அளவு நூற்கப்படாததும், வந்த நூலை ஒழுங்காக அது எந்த இடத்திற்குத் தேவையோ அங்கு வினியோகிக்கப்படாததும்தான் என்பது வெளிப்படை.

நூல் உற்பத்தியிலும் அதை வினியோகிப்பதிலும் மில் முதலாளிகளும், சர்க்காரின் டெக்ஸ்டைல் இலாகாவும் சேர்ந்து நடத்துகிற கண்மூடித்தனமான சதித் திட்டங்களேதான் மேற்கண்ட நிலைமைக்குக் காரணம் என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது.

மேலும், சர்க்கார் நாட்டு மக்களின் வாங்கும் சக்தியை மனதில் சிறிதும் கொள்ளாமல் நூலுக்கு அகாதமான முறையில் அதிகபட்ச விலையை நிர்ணயித்துக் கொடுத்திருப்பதும் மற்றொரு காரணமாகும். தான் வாங்கித் தயாரிக்கும் துணிக்கு தனது உழைப்புக்கான கூலியாவது கிடைக்கும் வகையில் விலை விற்றால்தான் நெசவாளி நூலைக் கொள்முதல் செய்வான். இன்று கைத்தறித் துணிக்கு அதிக விலை கொடுத்து வாங்கும் அளவிற்கு கதர் அன்பர்களைப்போன்று நாட்டில் கைத்தறி அன்பர்கள் இல்லை. தவிர கைத்தறித்துணி எந்த ஒரு அரசியல் கட்சியின் சின்னமாகவும் இல்லையாதலால் அது அதிக விலைக்கு விற்கவும் விற்காது.

எனவே, இயற்கையாகத் தறிகாரன் நூலை வாங்க மறுப்பது சகஜமே. இக் காரணத்தைஉணராது மதுரை, சேலம் நூல் வியாபாரிகள் நூல் வாங்காத தறிகாரர்களின் நூல்கூப்பன்களைப் பொய்த்தறிக்கார்டுகள் என அறிவித்து ரத்துசெய்துவிட வேண்டுமென அறிவீனமாகக் கூச்சல் போடுகின்றார்கள்.

நூலுக்கு விலை நிர்ணயம் செய்கிற காலத்திலே எந்த கைத்தறி நெசவாளியையோ, அல்லது துணி உபயோகிக்கும் பொதுமக்களையோ கலந்துகொண்டு விலை நிர்ணயம் செய்யப்படுவதில்லை. மில் முதலாளிகள் பஞ்சின் விலையுயர்வைக் காட்டி தங்கள் உற்பத்திப் பொருளான நூலுக்கு நல்ல விலையை நிர்ணயம்செய்து வாங்கிக்கொள்ளுகிறார்கள். எனவே, அதிக பட்ச நிர்ணய விலைக்கு இன்று நூல் போகாததற்கு எப்படி நெசவாளியைப் பொறுப்பாக்க முடியும்?

அதனால்தான் இன்று தமிழ் நாட்டின் மூலை முடுக்கிலுள்ள கைத்தறிநெசவாளர்சங்கங்கள் எல்லாம் நூலின் நிர்ணயவிலையை 46-47 ஆண்டில் இருந்த விலைக்கே குறைக்கவேண்டுமென்றும், அப்படிச்செய்தால் தான்தாங்கள்தொழில்நடத்திஏதோ அரைவயிற்றுக் கஞ்சியாவது குடிக்கமுடியுமென்றும் கூட்டங்கள் கூட்டி கூக்குரலிடுகின்றனர்.

நூல் விலை மிகவும் அதிகமாயிருப்பதால், அந் நூலால் தயாரிக்கப்படுகிற துணிகளின் விலை உயர்ந்துவிடுகிறது என்பது சிறிய குழந்தைக்கும் புரியும். எனவே நூல் விலை உயர்வானது உற்பத்தியாளரின் நியாயமான லாப வரம்பைக் குறைக்கிறது. இந்நிலையில் தனது லாப அளவு குறையாமல் பார்த்துக்கொள்ள, உற்பத்தியாளன் நெசவாளிக்குக்கொடுக்கும் கூலியில் கை வைக்கிறான். நெசவுத் தொழிலாளியின் கூலி பாதியாக்கப்படுகிறது—குறைக்கப்படுகிறது.

1946–47ம் ஆண்டில் 8 கெஜ நீளமுள்ள புடவை நெய்ய கூலி ரூ. 5 லிருந்து 7, 8 வரை கூட நெசவாளிக்குக் கிடைத்து வந்தது. ஆனால் இன்று அதற்குக் கிடைப்பதெல்லாம் ரூபாய் இரண்டுக்கும் குறைவுதான்! இதே போல கூலி வெட்டு பல ரகங்களிலும் ஏற்பட்டுள்ளதை நம்மால் ஆதார பூர்வமாக எடுத்துக்காட்ட முடியும். நெசவாளியின் வாழ்க்கை வரண்ட பாலைவனமாக்கப்பட்டிருக்கிறது நூல் விலையுயர்வால்.

இதைப் புரிந்துகொள்ள முடியாது—அல்லது முயற்சிக்காது தான் நெசவாளியின் நூல் பங்கீட்டுக் கார்டுகளை ரத்து செய்ய வேண்டுமென்று சில சுயநலமிகள் அர்த்தமற்றுக் கூச்சலிடுகின்றனர்.

நூல் அலாட்மெண்ட் முறையை எடுத்துக்கொண்டால் அது பாரதமாகவே முடியும்.

உதாரணமாக ஜமக்காளத்தின் ஊடைக்குத் தேவையான 10 நெ. நூலை சேலத்திற்கோ அல்லது பவானிக்கோ அலாட்மெண்ட் போட்டால் புத்திசாலித்தனமான செயல் என்று ஒப்புக்கொள்ளலாம். அதற்குப் பதிலாக மதுரையில் அந்த 10 நெம்பர் நூலை அலாட்மெண்ட் போட்டால் எப்படி நெசவாளி வாங்குவான்? அப்படித்தான் இன்று மதுரைக்கு 10 நெ. கலர் நூல் அலாட்மெண்ட் போடப்பட்டிருக்கிறது. அதை அங்குள்ள நெசவாளி வாங்க மறுக்கிறான்.

பனியன் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வேலையின்றி அவர்கள் ஒரு பக்கம் கூட்டம் கூடி கோரிக்கைகள் வைத்து கூச்சலிடுகிறபோது—அந்தத் தொழிற்சாலைகள் நிறைந்துள்ள திருப்பூர், சேலம் மதுரை போன்ற ஊர்களுக்குத் தேவையான "கோன்" நூலைப்

கண்ணைக் கவரும்
* எண்ணற்ற *
கைத்தறி ஜவுளிரகங்கள்
மொத்தமாகவும் சில்லறை யாகவும் கிடைக்குமிடம்,
காமதேனு டெக்ஸ்டைல்ஸ்
ஈஸ்வரன் கோவில்தெரு - ஈரோடு.

பொள்ளாச்சியில் உள்ள தறிகாரர்களுக்கு அலாட்மெண்ட் போட்டால் அந்த நூலைத் தறிகாரன் வாங்க மறுப்பது இயற்கை தானே?

செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த திருநாகேஸ்வரத்திற்குத் தேவையான நெம்பர் நூல் 80. ஆனால் அங்கு வினியோகிக்கப்படுவதென்னமோ 40 நெம்பர் நூல்தான். மாகாண ரீதியில் நடைபெற்றுவரும் இக் கோமாளித்தனங்கள் தவிர்க்கப்படவேண்டுமென எண்ணற்ற பல ஆண்டுகளாக எடுத்துக் கூறப்பட்டும் டெக்ஸ்டைல் இலாகா மட்டும் இன்னும் தன்னைத் திருத்திக் கொள்ளவேயில்லை. அதற்கு திருந்திக்கொள்ளுவதாக உத்தேசமும் இல்லைபோலும்,

இதைவிட வேடிக்கையென்னவெனில் தறிக்காரர்களுக்கு கொடுக்கப்படும் நூலின் அளவு!

சென்னைக்கு அருகாமையில் உள்ள சைதாப்பேட்டையில் 80 நெ. நூல் $\frac{1}{8}$ ராத்தல் சப்ளை செய்யப்பட்டிருக்கிறது தறி ஒன்றுக்கு. கோவை ஜில்லாவைச் சேர்ந்தஈரோட்டிலே 30 நெ நூல் 3 களி (லடி)தான் சென்றமாதம் சப்ளை செய்யப்பட்டிருக்கிறது. 20 நெம்பரில் 2 களி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை வைத்துக் கொண்டு தறிகாரன் ஒரு முழத் துணியாவது நெய்யமுடியுமா என்பதை நூல் வினியோகத்திற்கு உத்திரவு கொடுத்த எந்த டெக்ஸ்டைல் அதிகாரியாவது யோசித்து பார்த்ததாகவே தெரியவில்லை. ஏதாவது மண்டையில் இருந்தால் தானே யோசிப்பதற்கு.

தேவையில்லாத நூல், அதுவும் போதாத அளவு, எல்லாவற்றிற்கும் மேலாக விலையும் மூன்று மடங்கு அதிகம் என்றால் எப்படித் தறிகாரன் அதைப் பெற்று நெய்வான்? இதை எந்த நூல் வியாபாரிகள் சங்கமும் அதிகாரிகளிடம் வற்புறுத்தவேயில்லை. அதற்குப்பதில் தங்களுக்குப் போடும் அலாட்மெண்ட் நூலை நெசவாளர்கள் எடுத்துக்கொள்ளவில்லையெனில் அதை ராஜயத்திற்குள் அளவு கட்டுப்பாடு எதுவுமின்றி எங்குவேண்டுமானாலும் கொண்டுபோய் விற்க அனுமதி கொடுங்கள் என்று கூச்சலிடுகின்றன. இல்லையெனில் தறிகாரனிடம் உள்ள நூல் கூப்பன்களை ரத்து செய்யுங்கள் என வாதிக்கின்றன.

அதாவது இன்று நடைமுறையில் உள்ள இன்பார்மல் ரேஷன் திட்டத்தை உடைக்கவேண்டுமென்பதுதான் நூல் வியாபாரிகளின் திட்டம். அதை மாற்றி அமைக்க வேண்டுமென்பதல்ல.

மேற்கண்ட உண்மைகளை உணர்ந்தாவது இது போன்ற தப்புகள் இனிமேலும் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ளுவதுதான் இன்றைய அராஜக சம்பவங்களைத் தவிர்க்குமே தவிர, மேற்கொண்டும் மேற்கொண்டும் இம்முறைகளையே கையாண்டால் கண்டிப்பாக இன்றுள்ள குளறுபடிகள் நடந்துகொண்டேதானிருக்கும். எனவே,

(1) நூலின் நிர்ணய விலையை 1946—47ம் ஆண்டிலிருந்த விலைக்குக் குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். நூலின் விலையை நிர்ணயிப்பதில் நெசவாளருக்கும் பங்கு இருக்க வேண்டும்.

(2) ராஜ்யத்திலுள்ள கைத்தறிகளுக்கு எந்த நெம்பர் நூல் தேவையோ அவைகளை மில்களில் நூற்கும்படியாக உத்திரவிட வேண்டும். வேண்டாத நெம்பர் நூல் நூற்கப்படுவதை சட்ட பூர்வமாகவே தடை செய்யப்படவேண்டும்.

(3) நூல் வினியோகத்தில் இன்றுள்ள இன்பார்மல் ரேஷன் முறை ஒழிக்கப்பட்டு, கட்டாய நூல் பங்கீடு முறையை அமுலுக்குக் கொண்டு வரப் படவேண்டும்.

(4) தறிகளுக்கு வினியோகிக்கப்படும் நூல், அவைகள் உற்பத்தியில் ஈடுபடப் போதுமான அளவிலும் தரப்பட—பங்கீடு செய்யப்படவேண்டும். போதாத அளவு நூலைக் கொடுத்து தறிகாரர்கள் அதைக் கள்ள மார்க்கெட்டில் விற்றுவிடத் துணையாக நிற்கக்கூடாது.

(5) கைத்தறி ஜவுளியின் வெளி நாட்டு மார்க்கெட்டை நிரந்தரமாகப் பாதுகாக்க தீவிரமான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டால்தான், கை நெசவுத் துணி உற்பத்தி பெருகி நெசவாளியின் வாழ்க்கையில் கணிசமான மாறுதல் ஏற்படும்- இதற்கு துணியைத் தர நிர்ணயம் செய்யும் மசோதா உடனே சட்டமாக்கப்பட வேண்டும்.

(6) தறிகாரர்கள் தாங்கள் பெற வேண்டிய நூலுக்காக ஒவ்வொரு தடவையும் டி. ஆர். ஐ. தெய்வங்களைப் பேட்டி காணும் பழக்கம் அடியோடு ஒழிக்கப்பட்டு, ஒவ்வொரு நூல் வியாபாரிக்கும் இத்தனை தறிக் கூப்பன்கள் என்ற முறையில் விகிதசாரமாகப் பிரித்து இணைத்துவிட வேண்டும்.

இந்த ஆலோசனைகளை நடைமுறையில் ராஜ்ய சர்க்கார் மேற்கொள்ளுமா? ●

நெசவாளர்

இன்றைய காங்கிரஸ் சர்க்காருடையவும், இந்திய தேசிய காங்கிரஸினுடையவும் சமூக, பொருளாதாரக் கொள்கையில் கூட்டுறவு அமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதை யாவரும் அறிவர். நாட்டில் உள்ள சகல தொழிற்சாலைகளையும் கூட்டுறவு அடிப்படையில்தான் அமைக்கப்படவேண்டுமென்ற லட்சியத்தை-கொள்கையை யாரும் எதிர்க்கவேண்டுமென்ற நியாயம் இருக்கப்போதிய காரணமிருப்பதாகவே தெரியவில்லை.

மூலதனத்திற்கும், மனித உழைப்பிற்கும் இடையிலே உள்ள சோம்பேரி சுரண்டல் கூட்டத்தை—இடை வெளி ஆசாமியை முதலாளித்வப் பொருளாதார அமைப்பை இந்தக் கூட்டுறவு அமைப்பு பூரணமாக இல்லாவிட்டாலும் முக்கால் பாகம் ஒழித்தே விடுகிறது என்பது சிந்தனையுடன் இதை அணுகினால் புரியும்.

மேலும் மனிதனுக்கு மனிதன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற எண்ணத்தைப் போக்கி எல்லோரும் சமம் என்ற பார்வையை அவ்வியக்கம் அதன் உருப்பினர்களுக்கு அளிக்கிறது. திறமைக் குறைவாக உள்ளவர்களைத் திறமையாளர்களாகவும் மாற்ற கூட்டுறவு முறை தூண்டுகிறது

எனவேதான் கூட்டுறவு இயக்கத்தை சமூகத்தில் மிகக் கீழே உள்ள பாட்டாளிகளும், இடைத்தட்டில் நிற்கும் மத்ய தர வர்க்கத்தினரும் மனப்பூர்வமாக நேசித்து வளர்க்க தினே தினே முன்னுக்கு வருகின்றனர். மிகக் குறுகிய காலத்திலே அவ்வியக்கம் நம் மாகாண மக்கள் மத்தியில் பிரமாதமாக வளர்ந்து விட்டிருப்பது ஒன்றே அதற்குப் போதிய சான்றாகும்.

நகரப் புறங்களிலும், கிராமப் புறங்களிலும்லேவாதேவி நடத்த கூட்டுறவு அர்பன் பாங்குகளும், கிரிடிட் சொஸைட்டிகளும் அனேகமாக எல்லா இடங்களிலுமே அமைக்கப்பட்டிருக்கின்றன.

இதன்னியில் சமீப மாதங்களில் மலபாரில் பாக்குத் தொழிலுக்கென ஓர் கூட்டுறவு சங்கம் சர்க்காரின் அங்கீகாரத்துக்குப் பின் சம்பந்தப்பட்ட இலாகாவினர் ஆரம்பித்துக் கொடுத்துள்ளனர். தவிர, சேலத்தில் பழவகைகளை விற்பனை செய்யவும் ஓர் கூட்டுறவு சங்கம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. இப்படியாக நாட்டின் ஜீவநாடியாகவும், மக்களின் அன்றாடத்தேவையாகவும் உள்ள பல்வேறு வகைகளிலும் கூட்டுறவு இயக்கம் வேர்விட்டு மரமாகி பலனளித்து வருகிறது.

கூட்டுறவு இயக்கம்!

சிறு நிலச் சொந்தக்காரர்களின் விவசாயத் தொழிலுக்கு உதவியாக கூட்டுறவு நில அடமான பாங்குகள் வேறு அமைக்கப்பட்டிருப்பதோடு, மக்களின் வீட்டு நெருக்கடிகளை சமாளிக்க வேண்டி நகரப் புறங்களில் கூட்டுறவு முறையில் வீடுகட்டித் தர பல்வேறு இடங்களிலும் அதற்கான ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டு அவைகள் வெற்றிகரமாக வேலைசெய்து வருகின்றன.

மக்களின் பிற்கால க்ஷேமநலங்களைப் பாதுகாக்க, சின்னஞ்சிறு சேமிப்புகள் முதற்கொண்டு ஆயுள், நெருப்பு, மோட்டார் போன்ற துறைகளிலும் இன்ஷூரன்ஸ் தொழிலானது கூட்டுறவு முறையில், இதர பெரும் பணக்காரர்களின் தனிப்பட்ட இன்ஷூரன்சுக் கம்பெனிகளுக்குச் சமதையான முறையில் நடத்தப்பட்டு வருகிறது.

அச்சுக்கூடத் தொழிலிலும் கூட்டுறவு முறை எவரும் மெச்சும் வகையிலே புகுத்தப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக உணவு தானியக் கொள்முதலிலும், வினியோகத்திலும் அவ்வியக்கம் சிறப்பாக வேலை செய்து வருகிறது என்பது வெளிப்படை. லாரி, பஸ் போக்குவரத்திலும் கூட்டுறவு முறை இப்போதுதான் புகுத்தப்பட்டிருக்கிறதெனினும், அதன் ஆரம்பமே அதனுடைய எதிர்காலம் மிகவும் நல்லதாக இருக்குமென்ற நம்பிக்கையைப்பொது மக்களுக்கு அளித்து வருகிறது.

மேற்கொண்டு துணி உற்பத்தியில் கூட்டுறவு முறை எவ்வாறு வேலைசெய்து வருகிறது என்பதைப் பார்ப்போம்.

நமது மாகாணத்தில் நெசவு மில்களைக் காட்டிலும் நூற்பு மில்கள்தான் அதிகம் என்பது தெளிவு. நூற்பு மில்கள் அதிகமாக இங்கு வளர்வதற்கும், அத்தொழில் லாபகரமாக இருப்பதற்கும் அடிப்படையாக உள்ளது இம்மாகாண கைத்தறி நெசவுத்தொழிலேயாகும். இந்த ராஜ்யத்தில் 5 லட்சம் கைத்தறிகள் துணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனஎன்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இவைகளில் 1 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான கைத்தறிகள் கூட்டுறவு இயக்கத்தினுள் கொண்டுவரப்பட்டு நல்ல நிலைமையில் வேலைசெய்து வருகின்றன. இப்படி கைத்தறி நெசவாளர்களுக்கென நமது ராஜ்யத்தில் கிட்டத்தட்ட பிரதம(பிரைமரி) கூட்டுறவு சங்கங்கள் ஆயிரமிருக்குமென அறிகிறோம்.

இந்த $1\frac{1}{2}$ லட்சம் தறிகளுக்குத் தேவையான நூலைக் கொள்முதல் செய்து கொடுப்பதற்கும்,

அவைகளின் உற்பத்தியில் 25 சத வீதத்தை விற்றுக்கொடுப்பதற்கும் ம்காண நெசவாளர்கூட்டுறவு சங்கம் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. மீதி 75 சத வீத உற்பத்தியான ஜவுளியை அந்தந்த பிரைமரி சங்கங்களே இதரர்களுக்கு நேரிடையாக விற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ்வியாபாரத்தின் மூலமாக வரும் லாபத்தில், நெசவாள உருப்பினர்களின் பல்வேறு தேவைகள் பூர்த்தி செய்யப்பட க்ஷேமநிதி, பொதுநல நிதி, வீட்டுவசதிக்கான நிதி போன்ற வகைகளில் ஒதுக்கி வைத்துக்கொள்ளவும், மீதியை டிவிடெண்டாகவும், போனசாகவும் பகிர்ந்துகொள்ளவும் சட்டபூர்வமாகவே அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

அதன்படி தமிழ் நாட்டில் கோவை, ஒண்டிப்புதூரிலும், ஆந்திராவில் எமிங்கனூரிலும் கூட்டுறவு நெசவாளர்களுக்கு வீடுகள் (காலனி) கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தவிர நமக்குத் தெரிந்த வரையில் சென்னிமலை, திருச்செங்கோடு, ஸ்ரீவில்லிபுத்தூர், திங்களூர் போன்ற இடங்களில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், வீடுகட்டும் திட்டத்தை மேற்கொள்ளப் போவதாகவும் அறிகிறோம்.

கோவை தேவாங்க நெசவுக்காரர் கூட்டுறவு சொசைட்டியார் அதன் மெம்பர்களுக்கு இலவசமாக வைத்திய உதவியளிக்க ஓர் ஹோமியோபதி ஆஸ்பத்திரி வைத்துத் திறம்பட நடத்தி வருகிறார்கள்.

இதுபோல எண்ணற்ற நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டிகள், அதன் ஏழை அங்கத்தினர்களின் குழந்தைகளுக்கு இலவசமாகக் கல்வி கற்கவும், வைத்திய உதவியளித்தும் வருகின்றனஎன்பதை இங்கு விவரித்துத்தானாக வேண்டுமென்பதில்லை. பொதுவாக கூட்டுறவு இயக்கம் நெசவாளர்களுக்கு கணிசமான நற்பலன்களையே அளித்து வருகின்றன என்பது பிரசித்தமானதே.

கடந்த ஒரு வருட காலமாகவே இம்மாகாண நெசவாளர்கள் தொழிலுக்குப் போதுமான நூல் கிடைக்காது. உணவின்றிக் கஷ்டப்பட்டுக்கொண்டும், தொத்து நோய், பட்டினிச்சாவு, தற்கொலை, பிச்சையெடுத்தல் போன்ற இழிநிலைக்கு இலக்காகியும் வந்தனர் — வந்து கொண்டிருக்கின்றனர் என்பது ரகசியமான விஷயமல்ல. இந்த நிலையிலும் 1½ லட்சம் குடும்பங்கள் தங்களின் தொழிலை முறையாகச் செய்து அரை வயிற்றுக் கஞ்சியாவது குடித்து வந்தார்களென்றால் அதற்குக் காரணமாக நின்றிருந்ததுகூட்டுறவு இயக்கம்தான் எனத் தைரியமாகச் சொல்லாம்.

கஷ்ட காலத்தில் கைத்தறி நெசவாளிக்குக் காமதேனுவாக கூட்டுறவு இயக்கம் இருந்துவருவதை நடைமுறையில் பார்த்த (கூட்டுறவு இயக்கத்தில் சேராத) நெசவாளிகள் தங்களுக்கும் கூட்டுறவு சங்கங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இன்று பல்வேறு இடங்களிலும் கூறத் தொடங்கி விட்டனர்.

கைத்தறி நெசவாளர்களுடைய தலைமைத்தொழிற் சங்கங்கள் முதல்கொண்டு, ஆங்காங்கே உள்ள கிளைச் சங்கங்கள், கிராம, நகர, தாலூக்கா சங்கங்கள் வரை அனேகமாக எல்லாமே இன்று கூட்டுறவு சங்கங்கள் நெசவாளர்களுக்கு அமைத்துக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைக்க ஆரம்பித்து விட்டனர்.

இதில் சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் காங்கிரசும், தமிழ்நாடு கைத்தறி நெசவுத்தொழிலாளர் சம்மேளனமும் சர்க்காரே நெசவாளர்களுக்கான பங்கு மூலதனத்தைக் கடனாகக் கொடுத்து கூட்டுறவு சொஸைட்டிகளை ஆரம்பித்துக் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கோரி வருகின்றனர்.

பம்பாயில் சென்ற மாதம் நடந்த கைத்தறி நெசவாளர்களின் மகாநாட்டில்கூட தறி ஒன்றுக்கு ரூ. 50 கடனாகக் கொடுத்து கூட்டுறவு சொஸைட்டிகள் ஆரம்பித்துக் கொடுக்கவேண்டுமென அந்த ராஜ்ய சர்க்காரைக் கோரித்தீர்மானித்துள்ளனர்.

நமது ராஜ்ய சர்க்காரின் கைத்தொழில் அமைச்சர் ஸ்ரீ பெருமாள்சாமி ரெட்டியார், கடந்த நான்கு மாதங்களுக்குமுன் ஒரு பேட்டியின்போது, சர்க்காரின் நேரடி மேற்பார்வையில் கிருஷ்ணா, கிழக்கு, மேற்கு கோதாவரி ஜில்லாக்களில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப் போவதாகவும், அவைகள் எப்படி வேலை செய்கின்றன என்பதைப் பார்த்து மேற்கொண்டு பல்வேறு ஜில்லாக்களிலும் அத்திட்டத்தை விஸ்தரிக்கப் போவதாகவும் கூறினார்கள். இன்று அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்பது பற்றிய மேல் விவரங்கள் மட்டும் இதுவரை நமக்குக்கிடைக்கவேயில்லை.

ஒரு பக்கம் இந்த உயர்வான லட்சியங்களைக் கிரியாம்சையில் அமுல் நடத்த எல்லா அபிப்ராயங்கொண்ட நெசவாளர் சங்கங்களும், சர்க்காரும் முன்னுக்குவருகிறபோதே, மறுபக்கம் அவர்களின் ஆசைகளை தூள் தூளாக்கி வருகின்றனர். கூட்டுறவு இலாகாவிலுள்ள 'குட்டி' அதிகாரிகள்என்பதை கூறாமலிருக்க முடியவில்லை.

நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டிகளை ஆரம்பிக்க ஏற்படும் சிரமங்கள், அலைச்சல்கள், அதிகாரிகளில் சிலர் கொடுக்கும் தொல்லைகள் போன்றவைகளால் கூட்டுறவு இயக்கத்தின் மேல் அன்பு கொண்டு அதை ஆரம்பித்து நல்ல பயன்பெற எண்ணும் ஒன்றுமறியாப் பாமர ஏழை நெசவாளர்கள் எப்படி மனமொடிந்து போகின்றனர் என்பது பற்றி அடுத்துவரும் இதழ்களில் தொடர்ந்து எழுதலாம். —"கிருமி"

அதிக பேல் வந்தும் அளவு குறைகிறது!

"நாடா"

"உலக்கை தேய்ந்து உளிப்பிடியாயிற்று" என ஓர் பழமொழியுண்டு. அதுபோல ஆய்விட்டது இன்று கோவை ஜில்லாவிலும், மற்றும் இதர ஜில்லாக்களிலும் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு கிடைத்து வரும் நூலின் அளவு. குறிப்பாக 20, 30, 40 நெ. நூலும், 100 நெ. நூலும் சமீப மாதங்களில் வினியோகிக்கப்பட்டிருக்கும் அளவை நினைத்தால் மிகவும் பயங்கரமாகவே இருக்கிறது.

உதாரணத்திற்கு இங்கு ஈரோடு தாலூக்காவை எடுத்துக்கொண்டு, அங்கு தறிகாரர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நூலின் அளவுகளை கீழ்வரும் விவரங்கள் மூலம் நிரூபிக்கலாம்.

ஈரோடு தாலூக்கா துடுப்பதி எரியாவில் மார்ச் மாதம் முதல் கொண்டு ஜூலை மாதக் கடைசி வரை அதாவது ஐந்து மாதங்களுக்குமாக 20 நெ. நூல் நெசவு செய்யும் தறிகளுக்கு 3 தடவைகளில் கொடுக்கப்பட்டிருக்கும் நூலெல்லாம் சேர்ந்து 11 ராத்தல் தான். அதாவது 1 கட்டும் 3 களியும்.

இதை முறையே, நூல் பங்கீட்டுக்கார்டுகள் நெம்பர் 5336, 5325 ஆகிய இரண்டும் நிரூபிக்கின்றன. ஏன் நாம் இந்த நூல் பங்கீட்டுக் கார்டுகளின் நெம்பரை இங்கு குறிப்பிடுகிறோமெனில் அதிகாரிகள் நாம் கூறும் புகாருக்கு ஆதாரமில்லையெனச் சொல்ல முடியாது என்பதை எடுத்துக் காட்டவேதான். மேற்படி கார்டுகளைப் போல அந்த எரியாவில் உள்ள ஆயிரக்கணக்கான கார்டுகளின் நெம்பரை நம்மால் மேலும் தரமுடியும் என்பதையும் அங்கு எடுத்துக்காட்டுகிறோம்.

முறையே அக்கார்டுகளுக்கு 1951-ம் வருடம் மார்ச் மாதம் 15-ந் தேதி 20 நெ. நூலில் ½ கட்டும், மே மாதம் 8-ந் தேதி 26 நெ. நூலில் ½ கட்டும் ஜூலை மாதம் 25-ந்தேதி 30நெ. நூலில் 3 களியுமாக வினியோகம் செய்திருக்கிறார்கள்!

7 நாள் வேலைக்குக் கூடப் போதாத நூலைக் கொண்டு 5 மாத காலம் ஒருநெசவாளியின் குடும்பம் ஜீவிக்க முடியுமென்று எண்ணிப் பேசுகிற எவரையுமே நாம் "முற்றிப்போன முழுப் பைத்தியம்" என்று அழைக்கவே விரும்புகிறோம். இது துடுப்பதி எரியாவில்.

ஈரோடு எரியாவில் இதனினும் குறைவாகவேதான் நூல் கொடுத்திருக்கிறார்கள். அந்த எரியாவின் நூல் ஆலோசனைக் கமிட்டித் தலைவர் நமக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஒரு பகுதியை இங்கு குறிப்பிட விரும்புகிறோம். அதாவது; "1951 ஜனவரி மாதம் முதற்கொண்டு ஆகஸ்ட் மாதம் 2—8—51 வரை அதாவது 8 மாதங்கள்வரை தறி ஒன்றுக்கு ஒரு சட்டும் 2 களி நூலும் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது" என அதில் குறிக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக ஈரோடு தாலூக்காவில் உள்ள 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்களுடைய குடும்பங்களை இது போன்ற நூல் வினியோகத்தின் மூலம் உயிரோடு தினசரி கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லப்பட்டும், நாடோடிகளாக கிராமத்தை விட்டுக்குடி பெயர்ந்தும்வரும்படியாக விடப்பட்டிருக்கிறது.

அதே காலத்தில் கன்சியூமர் நூல் கோட்டாப் பெறும் கூட்டத்தாருக்கு மட்டும் தறிக்கு 2 கட்டு நூல் வீதம் கொடுக்கப்பட்டு வரும் அராஜக நூல் வினியோக ஏற்பாடும் அதே தாலூகாவில் நடந்து கொண்டு தானிருக்கிறது என்பதை நேயர்களுக்கு அறிவுறுத்த விரும்புகிறோம்.

கைத்தறி நெசவாளர்களிடையே, அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகளுக்கு நேர்விரோதமான முறையில் பாரபட்சம் காட்டப்பட்டு வருவதை, பலதடவைகளில் "கைத்தறி"யின் வாயிலாக எடுத்துக் காட்டப்பட்டும் இன்றுவரை தங்களது நூல்வினியோகக் கொள்கையை ராஜ்ய சர்க்கார் மாற்றிக் கொள்ளாமலேயே இருந்து வருகின்றனர்.

100 நெ. நூலை எடுத்துக்கொண்டால் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் முறையே 3, 2, 1 ராத்தலாக கோவையில்வினியோகிக்கப் பட்டிருக்கிறது. படிப்படியாக நூலின் அளவு குறைக்கப் பட்டு வருகிறது.

ஒரே (கோவை) ஜில்லாவில், ஒரே டெக்ஸ்டைல் கண்ட்ரோல் ஆபீஸர் ஒரு தாலூக்காவில் உள்ள நெசவாளிக்கு 100 நெ. 2 ராத்தலாகவும், வேறு தாலூக்காவிலுள்ள நெசவாளிக்கு 3 ராத்தலாகவும் வினியோகிக்கும்படி உத்திரவிடும் மர்மம் நமக்குப் புரியமாட்டேன் என்கிறது.

இந்த நிலைக்குக் காரணமாகவுள்ள எந்தத் திட்டத்தையும் நாம் வன்மையாக ஆட்சேபிக்கிறோம்.

சென்னை சர்க்காரின் கைத்தொழில் அமைச்சரைக் கண்டு கேட்டால் நூல் வினியோகப் பொறுப்புகள் அந்தந்தஜில்லாக் கலெக்டர்களைச் சேர்ந்தது; அதில் எழும் தகராறுகளுக்கு—ஊழல்களுக்கு அவர்கள் தான் பொறுப்பே தவிர, ராஜ்ய சர்க்கார் பொறுப்பல்ல என்று கூறுகிறார்.

அப்படியானால், ஒவ்வொரு ஜில்லாவிலும் நடைபெற்றுவரும்

நூல் வினியோக ஊழல்களுக்கு ஜில்லாக் கலெக்டர்களே பொறுப்பு தாரிகளாகிறார்கள். அவர்களை அணுகி சம்பந்தப்பட்ட நெசவுத் தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கேட்டால் புகாரை எழுதிக் கொடுங்கள் விசாரிக்கிறோம் என்கிறார்களாம்!

தாங்கள்போட்ட உத்திரவால் வந்த ஊழல்களைத் தாங்களே (டெக்ஸ்டைல் கண்ட்ரோல் ஆபீஸர்களே) விசாரிக்கிறார்களாம்! எப்படியிருக்கிறது கதை?

இவ்வையெல்லாம் நம்கண்ணுக்குத் தென்படுகிற மேலெழுந்தவாரியானசம்பவங்கள், இந்நிலைமைக்கு ஓர்அடிப்படைக்காரணம் இருக்கவேண்டுமல்லவா? அதை என்ன என்று சற்று பார்ப்போம்.

கோவை மில் முதலாளிகள் வட்டாரங்களிலிருந்து வரும் காரணங்கள் இந்நிலையை பளிச்செ:சன எடுத்துக்காட்டுகிறது. அதாவது;

குறைந்த நெ. நூல் நூற்கத் தேவையானபஞ்சு உள் நாட்டில் போதுமான அளவு இல்லாததால் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறதாம். ஆனால் அந்தப் பஞ்சு தென்னிந்திய மில்களுக்குக் கொடுக்கப்படாமல் பம்பாய், அஹமதாபாத், ஷோலாப்பூர் போன்றபிரதேசங்களில் உள்ள வடநாட்டு ஆலைகளுக்குத் தான் கொடுக்கப்படுகிறதாம்.

வடநாட்டுப் பஞ்சாலைகளில் பெரும்பாலனவை நூல் மட்டும் நூற்பதில்லையென்பதும், துணி உற்பத்திதான் அவைகள் செய்கின்றன என்பதும் யாவருக்கும் தெரியாத விஷயமல்ல. ஆகவே இங்குவரும் அமெரிக்கப் பஞ்சு தென் இந்திய மில்களுக்கும் வினியோகிக்கப்பட்டால் இம்மாகாணத்திலுள்ள லட்சக் கணக்கான கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்த நெ. நூல் கிடைக்க ஏதுவாகுமென்பதே அது.

இரண்டாவதாக உயர்ந்த நெ. நூலான 100 கிடைக்காமலிருப்பதற்கு மில் முதலாளிகளின் தகிடுதித்தங்கள் தான் காரணமென அறிகிறோம். 100நெ. நூல் நூற்கத் தகுதி வாய்ந்த இயந்திர சாதன வசதியுள்ள மில்கள் அதில் போதிய அக்கரை காட்டுவதில்லை. அதன் காரணமாகவே தான் 100 நெ. நூலுக்கு நெருக்கடி யேற்பட்டிருக்கிறது. எனத் தெளிவாகத் தெரிகிறது.

அதே காலத்தில் 50, 60 நெ. நூல்களைப் பெருவாரியான அளவில் மில்கள் நூற்கின்றன. இந்த நெம்பர் நூல்கள்சேலம், மதுரை, கோவை போன்ற ஜில்லாக்களில் செலவாகாமல் வாங்கு வாரற்றுச் சீப்பார்த்துக் கிடக்கிறது என்ற செய்தியும் நமக்கு வராமலில்லை. ராஜ்ய நாமினிகளும், நூல் வியாபாரிகளும் இந்த நெ. நூல்களைத் தங்களுக்கு அலாட்மெண்ட்

(20-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீவில்லிப்புத்தூர் நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி, விற்பனை

சங்கம் லிமிடெட், No. A. 1601.,

ஸ்ரீவில்லிப்புத்தூர்.

பலலட்சக்கணக்கான பாட்டாளிகளை உய்வித்துவரும் பழந்தொழில் கைத்தறி நெசவு. மக்களின் ஆதரவே அதை வளர்க்கும் சாதனம். மக்களின் நலனே குறிக்கோளாகக்கொண்டு உழைப்பவை கூட்டுறவு சங்கங்கள். அதன் அடிப்படையில் எங்கள் சங்கம் ஆரம்பித்த காலந்தொட்டு மக்களின் தேவைக்கான வேட்டி, துண்டு இன்னும் வெள்ளைப் பீசுகள் ஏராளமாகத் தயாரித்து நியாயமான விலையில் வினியோகிக்கிறோம்

தேவைக்கு எழுதுங்கள்.

A. K. ஞானியார், செயலாளர்.

P. குருசாமி, தலைவர்

இராசீபுரம் கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி & விற்பனை

சொஸைட்டி லிமிடெட், நெ. S. 507.

இராசீபுரம், *P. O.* சேலம் ஜில்லா.

சொந்த சாயத் தொழிற்சாலையில் நூல் சாயம் நீர்க்கப்பட்டு 40 நெ. முதல் 100 நெ. வரை நூலில் 6, 7, 8, 9 கெஜம் நீளம் 44", 48" அகலம் அழுத்தமான நெசவு, பேட்டு ரகங்கள், நவீன பார்டர்கள், முந்திகள் உள்ள கலர் சேலைகள் தயார் செய்யப்பட்டிருக்கிறது. தற்சமயம் விலை குறைக்கப்பட்டிருக்கிறது.

தேவையுள்ளோர் விபரங்களுக்கு எழுதவும்.

P. C. அப்துல் வஹாப், கோவாபரேடிவ் சப் ரிஜிஸ்திரார், செக்ரடரி.

V. K. ரங்கசாமி, பிரஸிடெண்டு.

நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், அதன் உறுப்பினர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்தைப்பற்றி ஸ்ரீவில்லிப்புத்தூர் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் அவர்கள் இக்கட்டுரையில் விவரிக்கிறார்.

நெசவாளர் கூட்டுறவு காலனி

உயிர் வாழ் பிராணிகளில் உயர்ந்தவனாகக் கருசப்படும் மனிதன் மனிதனாக வாழ முவ்வகைத் தேவைகளைப் பெற்றவனாக இருக்க வேண்டியிருக்கிறது. உண்ண உணவும், உடுக்க உடையும், வசிக்க வீடும் பெறவேண்டியே மனிதன் உழைக்கிறான். ஆனால் இவற்றைப் பூராவாகப் பெறாதவர்கள் நம் நாட்டில் மலிவு. இவற்றை மக்களுக்குக் கிடைக்கச் செய்வதில் அரசாங்கத்தின்பொறுப்பு தலைமையானது. அதிலும் மக்கள் சர்க்கார் எனச் சொல்லிக்கொள்ளும் நம் அரசாங்கத்திற்கு இவற்றிலுள்ள பொறுப்பைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. ஆனால் இவற்றைப் பற்றி சர்க்கார் என்ன முயற்சி எடுத்தார்கள், எடுக்கிறார்கள், எடுக்க உத்தேசித்திருக்கிறார்களோ அவைமட்டும் நம் நாட்டின் தேவையை முழுதும் பூர்த்தி செய்ய முடியாது. சர்க்காரால் தனியாகஎல்லாவற்றையும்செய்ய இயலாது என்பதை அறிவோம். ஆனால் சர்க்கார் மக்களின் ஒத்துழைப்போடு எதையும் செய்யலாம். இதற்குத்துணை நிற்பவைதான் கூட்டுறவு சங்கங்கள். அவற்றைப்பயன்படுத்தி சர்க்கார் மக்களின் நலனுக்கு பலவிதகாரியங்கள் செய்யலாம். அவற்றைச் செய்துதான் வருகிறார்கள். அது போதாது அவ்வளவுதான்.

கூட்டுறவு முயற்சியில் எந்தக் காரியத்தையும்செய்யலாம். ஆனால் இப்பொழுது நாம் எடுத்துக் கொள்வது கூட்டுறவு முறையில் வீடுகள் கட்டுவது—அதிலும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் அவற்றின் உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பது பற்றியேயாகும். இன்றைய நாட்டுநிலைமையில் எந்த தொழிலாளியையும்விட அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பவன் நெசவாளிதான். அவன் எப்பொழுதும் நிம்மதியாக வாழ்ந்ததில்லை. அவனுக்கு வேண்டிய மூலப் பொருள் (நூல்) தாராளமாகக் கிடைத்தால் அவனது உற்பத்தி (துணி) தேங்கி விற்பனையாகாது. துணிக்குக் கிராக்கியிருக்கும் போது போதிய நூல் கிடைக்காது. இந்த நிலையில்லா வாழ்வினூடே வசதியாக-வாழ நெசவாளிக்கு வழியில்லை. வாழவே வழியில்லாதிருக்கும்

ஏ. கே. ஞானியார்,
ஸ்ரீவில்லிப்புத்தூர்.

போது வசிக்க வசதியான வீட்டிற்கு என்னசெய்வான் அவன். இந்த நாட்டில் நெசவாளி அனுபவிக்கப் பிறக்கவில்லையா? மற்றவர்களுக்கு இந்த நாட்டில் எந்தெந்த உரிமைகள் உண்டோ அதே உரிமை நெசவாளிக்கும் இருக்கவேண்டும். பாவம் கொடுக்கப்பட்ட உரிமையை உபயோகிக்கத் தெரியாது அப்பாவி நெசவாளிக்கு.

இன்று நெசவாளர்கள் கொஞ்சம் தலை நிமிர்ந்து நடக்க அவர்களுக்கு உதவியது கூட்டுறவு சங்கங்களே ஆகும். தன்னிடம் சேர்ந்த நெசவாளருக்கு ஏதோ ஒரு நிரந்தர தொழிலும், நியாயமான கூலியும், லாபத்தில் பங்கும் சம உரிமையையும் இன்று அளித்து வருகின்றன. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நோக்கங்கள் நெசவாளருக்கு வேலை கொடுப்பது மட்டுமன்று, நெசவாளரின் பொருளாதார நிலையை உயர்த்தி அவர்களை மற்ற மக்களுக்குச் சரி நிகர் சமானமாக வாழவைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பதற்கும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் பொறுப்பு உண்டு. ஆனால் இப்பொறுப்பை ஏற்று நடத்திய சங்கங்கள் வெகு சிலவே. இருப்பினும் எல்லா சங்கங்களும் இவற்றில் தங்களாலியன்ற பங்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதே என் அவா.

நெசவாளர்களின் உடனடித் தேவை அவர்கள் வசிப்பதற்கும் தொழில் செய்வதற்கும் ஏற்ற வீடுகளை அமைத்துக் கொடுப்பது. இவற்றில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் முயற்சி எடுத்தால் அவர்களுக்கு சர்க்காரின் உதவி கிடைக்கும் இக் காரியத்தில் துணிந்து இறங்கி வெற்றி கண்ட சங்கங்களில் பெல்லாரி மாவட்டத்திலுள்ள எமிங்கனூர் நெசவாளர் கூட்டுறவு சங்கம் தனது வீடு கட்டும் திட்டத்தை 1948-ம் ஆண்டில் ஆரம்பித்தது. அதனுடைய திட்டம் மொத்தம் 400 வீடுகள் கட்ட வேண்டுமென்பது. அதற்காக 53 ஏகர் 25 சென்ட் நிலத்தை அது ஆர்ஜிதம் செய்து இதுவரை 60 வீடுகளுக்கு மேல் கட்டிவிட்டார்கள். இன்னும் 50 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யவும் கூடிய விரைவில் மேற்கொண்டு வீடுகள் கட்டி முடிக்கவும் ஏற்பாடாகி வருகிறது.

இதே போல் தமிழ் நாட்டில் கோயம்புத்தூரையடுத்த ஒண்டிப் புதூரிலும் நெசவாளர் கூட்டுறவு காலனி கட்டியிருக்கிறார்கள். எங்களுடைய சங்கத்திலும் மேற்படித்திட்டத்தை அமுல் நடத்தப் போகிறோமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டன. கூடிய விரைவில் இத்திட்டம் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. நம் நாட்டிலுள்ள மற்ற நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் இம்மாதிரி திட்டத்தைஆரம்பித்து நெசவாளரின் குடியிருப்புக் கஷ்டத்தை நீக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு ஒரு சில விரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1. இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர முதற்படியாக நம் சங்க பைலாவில் அதற்காகத் தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் பைலாக்களை மகாசபையில் வைத்து நிறைவேற்ற வேண்டும்.

2. இடம் தேர்வு: திட்டத்தை ஆரம்பிக்கும் முன் காலனிக்கான இடம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அந்த இடம் வசதியானதாகவும், விசாலமானதாகவும்—அதாவது உறுப்பினர்களின் வீடுகளுக்கு மாத்திரமில்லாமல், அலுவலகம், கிடங்குகள் விளையாட்டு மைதானம், பூங்கா, (Park) இன்னும் மற்ற வசதிகள் செய்வதற்கும் போதுமானதாக இருக்கவேண்டும். நிலத்தை நேரடியாகவோ, ஆர்ஜிதம் செய்தோ வாங்கலாம். நிலத்தை வாங்கிய பின் காலனி அமைப்பு (lay out) தயார் செய்து அதை சென்னையிலுள்ள நகர அமைப்பு நிர்வாகிக்கு (Director of Town Planning) அங்கீகாரத்திற்கு கூட்டுறவுப் பதிவாளர் மூலம்அனுப்பிவைக்க வேண்டும்.

3. மாதிரி வீடு: அமைக்கப் போகும் வீடானது நெசவாளர் குடும்பத்திற்கு ஏற்றதாகஇருக்க வேண்டும். அதைகட்டிமுடிக்கும் செலவும் குறைந்த பட்சமாக இருக்கவேண்டும். வீட்டின் அமைப்பு இரண்டு மூன்று தறிகள் போடும்படியாக ஒரு அறையும், சமையல், சாப்பாடு, சாமான் அறை இவைகள் தனித்தனியாகவும் இருக்கவேண்டும். ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு கக்கூசும், குளிக்கும் அறையும் இருப்பது நலம். இடத்திற்குத் தகுந்தாற்போல் அமைப்பைவேண்டுமானால்மாற்றிக்கொள்ளலாம். ஆனால், மொத்தம் ஆகும் செலவானது ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் அதாவது சுமார் ரூ. 3,500-க்கு மேற் போகக் கூடாது என்பது தான் இதில் கவனிக்கவேண்டியது.

4. குடியிருப்போர் தேர்வு: இவ்வீட்டுத் திட்டத்திற்கு நாம் தேர்ந்தெடுக்கும் மெம்பர்கள் சங்கத்திற்குஉண்மையானவராகவும் வீடுதேவையுள்ளவராகவும் ஆரம்பப் பணம் கொடுக்கவும் பின் தவணைகளில் பணம் செலுத்தவும் சக்தியுள்ளவராகவும் இருக்கவேண்டும். ஆரம்பப் பணமாக கட்டிடக் கிரயத்தில் 5ல் ஒரு பாகம் வசூலிக்கலாம். மீதி பணம் 20 வருடங்களில் தவணைகளாக செலுத்தப்பட வேண்டும்.

5. காலனிக்காகும் உத்தேச செலவு: தேர்ந்த ஆட்களைக் கொண்டு காலனிக்கு ஆகும் உத்தேச செலவை, நிலக்கிரயத்தைக் கொண்டும், அதைத் திருத்தவேண்டியிருந்தால் அதற்காகும் செலவைக்கொண்டும் அலுவலகக் கட்டிடத்திற்கு ஆகும் மதிப்பைக் கொண்டும் தீர்மானிக்கப்பட வேண்டும். நிலக்கிரயத்தின் கால் பங்குத் தொகையை குடியிருப்போரின் பொது நல காரியங்களுக்காக ஒதுக்கப்படவேண்டும்.

6. பொருளாதாரம்: திட்டத்திற்கு ஆகும் செலவில் பாதி சர்க்காரிடமிருந்து வாங்கும் கடன் மூலமாகவும், மறு பாதி சங்கத்திலுள்ள நிதியிலிருந்தும், குடியிருப்போரிடமிருந்து வசூலித்த ஆரம்பப் பணத்திலிருந்தும் ஈடு செய்யப்படும். இதில் சர்க்காரிடமிருந்து வாங்கும் கடன் திட்டத்திற்கு ஆகும் செலவில் பாதிக்கு மேல் போகக் கூடாது. அதோடு சங்கத்திலிருந்து இத்திட்டத்திற்கு போடும் பணத்தினால் சங்கத்தின் நடைமுறை அலுவலுக்கு ஒரு வித இடையூறும் இருக்கக்கூடாது. சர்க்காரிடமிருந்து வாங்கும் கடனுக்கு சுமார் $3\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து $4\frac{1}{2}$ சதவீதம் வரை வட்டிகொடுக்க வேண்டிவரலாம். இக்கடன்20 வருடங்களில்வசூல் செய்யவேண்டும். இதற்கு அவர்களுக்கு கொடுக்கப்படும் கூலியிலிருந்து ஒரு பகுதியை மாதாமாதம் பிடித்து வரவேண்டும்.

குடியிருப்பவர் வீட்டின் முழுக்கிரயத் தொகையையும் செலுத்தும்வரை வீடானது சங்கத்தின் பெயரால்தான் இருந்துவரும், அதுவரை அந்த வீட்டைகுடியிருப்பவர் விற்கவோ,வேறு எதும் வில்லங்கத்திற்குட் படுத்தவோ முடியாது.

7. கடனைத் திருப்பிச்செலுத்த வழி: ஒரு நெசவாளருக்குக் குறைந்தது மாதத்திற்கு ரூ. 30 கிடைப்பதாகக் கொண்டு ஒரு குடும்பத்தில் 4 தறிகள் இருப்பதாக வைத்துக் கொண்டால் மாதத்தில் அவருக்குக் கூலியாக கிடைப்பது ரூ. 120 ஆகிறது. இதில் ரூபாய்க்கு 2 அணா வீதம் பிடித்தால் ரூ. 15 மாதத்திற்கு

(15ம் பக்கம் பார்க்க.)

"கைத்தறி"
ஆண்டு சந்தா ரூ. 3
தனிப் பிரதி அணா நான்கு
மாதிரிப் பிரதி வேண்டுவோர் நான்கு அணா தபால் ஸ்டாம்பு அனுப்பவும்
ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.
"கைத்தறி" காரியாலயம்
முத்தணன் குளம் வீதி, கோவை

ஜவுளி ஏற்றுமதிக் குறிப்புகள்.

★

ஏடன்.

கழிவுப்பஞ்சால் தயாரிக்கப்பட்ட கம்பளிகள்:

ஏடனில் சிறிதளவு கழிவுப் பஞ்சு நூலால் தயாரித்த கம்பிளி வர்த்தகம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ஹாலந்திலிருந்து வருகின்ற இந்தரக கம்பளிகளைப் போல, இந்தியக் கம்பளிகள் (பெட்ஷீட்டுகள்) அளவு, எடை, தரம் ஆகியவற்றில் ஒத்திருந்தாலும் பினிஷிங் (finishing) அவ்வளவு நன்றாக இருப்பதில்லை. பினிஷிங்கில் (fidishing) ஹாலந்து கம்பிளிகளைப் போல இருந்தால் இந்தியக் கம்பளி ஏற்றுமதி அதிகமாகி விற்பனையாளர்கள் லாபமடையலாம்.

பனியன்கள்:

இந்திய ஏற்றுமதியாளர்கள் அனுப்பும் பனியன்களில் குறிப்பிடப்பட்டுள்ள அளவு சகஜமாக இருப்பதில்லை என்ற புகார் வருகிறது. தோள் பட்டைகளில் பினிஷிங் (finishing) நன்றாக இல்லாததோடு, பனியன்களின் உண்மையான அளவு அவை மீது சீல் குத்தப்பட்ட நெம்பர் அளவுகளில் இருப்பதில்லை. இதர நாட்டு ஏற்றுமதியாளர்கள் இவ்விஷயங்களை நன்கு கவனிக்கின்றனர்.

பொதுவான குறைகள்:

இந்திய ஏற்றுமதியாளர்கள் தாங்கள் அனுப்பிவைக்கும்ஜவுளி ரகங்களுக்கு சாம்பிள்கள் அனுப்புவதில்லை. ஒவ்வொரு முறையும் சரக்கு கப்பல்களில் அனுப்பும் போது, இதர நாட்டு வர்த்தகர்கள் ஒவ்வொருஆயிரம் கஜத்திற்கும் இரண்டிரண்டு சாம்பிள்களை விமானத் தபாலில் அனுப்புகின்றனர். இதனால் சரக்கு வெளி நாடுகள் போய்ச் சேருமுன்பாகவே கூட அவைகள் பார்வர்ட் டெலிவரியாக விற்பனையாகி விடுகின்றன. இந்திய ஜவுளி வர்த்தகர்களும் இம் முறையைப் பின்பற்றினால் நல்ல லாபமடைய முடியும்.

பர்மா:

இந்திய ஜவுளிகளின் இறக்குமதி பர்மாவில் குறைந்து போயுள்ளது. காரணம்; ஜப்பானிலிருந்து ஏராளமான ஜவுளிகள் இறக்குமதியாவதுதான், பர்மாவின்மார்க்கெட்டில்இந்தியஜவுளிகளுக்குள்ள போட்டியைத் தவிர்க்க அங்குள்ள இந்தியசர்க்காரின் பிரதிநிதியை ஆலோசனை கேட்பது நல்லது.

ஹாங்காங்:

சர்ட்டிங்குகள், கோட்டிங்குகள், சில்க் சர்ட்டிங்குகள், உல்லன் கோட்டிங்குகள், கம்பிளிகள், குடிசைத் தொழில் உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றை ஹாங்காங் வர்த்தகர்கள் பெரிதும் விரும்புகிறார்கள் என்று தகவல் கிடைத்திருக்கிறது. தற்போது இந்திய வர்த்தகம் ஹாங்காங்கில் நடப்பதற்குரிய நல்ல சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. இந்திய பாங்கிகள், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் ஆகியவைகளுக்கும்கூட ஹாங்காங்கில் நல்லஎதிர் காலம் இருக்கும்.

இந்தோனிஷியா:

இந்தோனிஷியாவில் ரெடிமேட் ஆடைகளுக்கு நிறைய கிராக்கி இருக்கிறது. அரை நிஜார்கள், கைக்குட்டைகள், மேஜோடுகள், ஷர்ட்டுகள், ஸ்போர்ட் ஷர்ட்டுகள், ஜெர்ஸிகள் ஆகியவைகளுக்கு இந்தோனிஷியாவில் நல்ல மார்க்கெட் இருக்கிறது. இப்பொருள்கள் இந்நாட்டில் உற்பத்திச் செய்யப்படுவதில்லை. ஹாலந்து, ஜப்பான், ஹாங்காங்முதலிய இடங்கள் இப்பொருள்களை இதுவரை இந்தோனிஷியாவுக்கு ஏற்றுமதி செய்துவந்திருக்கின்றன. இந்தியஜவுளிகளுக்கு இந்தோனிஷியாவில் நல்ல கிராக்கி ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் இது.

மலேயா:

இந்திய கன்ஸ்யூமர் பொருள்களுக்கு மலேயா ஒரு நல்ல விற்பனை ஸ்தலமாக இருக்கும். இங்கே நேரடியான ஒரு பிரதிநிதி இருந்து விற்பனையைக் கவனித்துக் கொள்வது உபயோககரமாக இருக்கும். சர்வதேசப் போட்டி ஸ்தலமாகஇருக்கும் மலேயாவில் கடித மூலம் இந்திய ஏற்றுமதி வர்த்தகர்கள் வர்த்தகம் செய்வதைவிட நேரடியான ஒரு பிரதிநிதியையே ஸ்தலத்தில் வைத்துக் கொள்வதுஎவ்வளவோ லாபகரமானது. பல சிறிய வர்த்தகர்கள்கூட கூட்டாக ஒவ்வொரு பிரதிநிதியை மலேயாவின் முக்கிய நகரமான சிங்கப்பூரில் நியமித்து வைத்துக் கொள்ளலாம்.

மலேயாவிற்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருப்பவைகளில் 75 சதவிகிதம் இந்திய ஜவுளிகள் என்பது இங்கு கவனிக்கத் தக்கது.

ஜப்பானிலிருந்து இறக்குமதியாகும் கன்ஸ்யூமர் பொருள்களுக்கு விலை உயர்த்தப்பட்டு விட்டதாலும், ஹாங்காங்குக்கு வந்து கொண்டிருந்த அமெரிக்கப் பொருள்கள் நிறுத்தப்பட்டு விட்டதாலும் இந்தியப் பொருள்களுக்கு மலேயாவில் நல்ல கிராக்கி எற்பட்டிருக்கிறது.

கிரே, காக்கி, புளூ டிரில் ஜவுளிகளுக்கும், கிரே, வெள்ளை, கலர், செக், ஷர்ட்டிங் ரகங்களுக்கும், எல்லாரக கோட்டிங்குகளுக்கும், நாலுக்கும், டவல், திரைச் சீலைத் துணிகளுக்கும் நல்ல கிராக்கி இங்கே ஏற்பட்டு இருக்கிறது.

சூடான்:

இந்திய ஜவுளிகளுக்கு இங்கே அதிகமாக கிராக்கி இருக்கிறது. ஆனால் சாயம் போடப்பட்டும், அச்சிடப்பட்ட ரகங்களுக்கும் மதிப்புக் குறைகிறது.

ஏனென்றால் நீடித்தசாயம்என்று சொல்லப்படும் இந்திய ரகங்கள், சாயம் நீடித்து நிற்பனவாக இருப்பதில்லை. பாக்கிங்குகளும் சரியாக இருப்பதில்லை. இன்வாய்ஸ்களில் குறிப்பிடப்படுகின்ற அகலம், நீளம் இருப்பதேயில்லை.

தாய்லாந்து:

இங்கும் இந்தியஜவுளிகளுக்கு அதிகமாக கிராக்கியிருக்கிறது. பாங்காக் வர்த்தகர்கள், இந்திய ஜவுளிகள், சாம்பிள் காட்டப்படும். தரமுள்ளசரக்குகளாகவந்து சேருவதில்லை என்று குறைபட்டுக் கொள்ளுகிறார்கள்.

இந்தோனிஷியா:

இந்திய பளபளப்பு இல்லாத மோத் சூட்டிங்ரகங்களுக்கு இங்கே நல்ல கிராக்கியிருக்கிறது. அது போக பிரிண்டிங் ஷர்ட்டிங், கிரே ஷர்ட்டிங் ஆகிய ரகங்கள் 36, 42 அங்குல அகலங்களில் ஸ்தல வியாபாரிகளால் பெரிதும் விரும்பப்படுகின்றன. கிரே ஷர்ட்டிங்குகள் 26 அமெரிக்க செண்டுக்கும் பிரிண்டட்ஷர்ட்டிங்குகள் 22செண்டுகளுக்கும்டோக்கியோ டெலிவரிக்கு விலை வைக்கப்பட்டிருக்கிறது. விலைவிஷயத்தில் இந்திய ரகங்கள் சிறிது சலீசாக இருந்தால் அதிகமாக வரவேற்கப்படலாம். (அமெரிக்க 100 செண்டுக்கு இந்திய ரூபாய் 4—8—0 ஆகிறது)

நியூஜிலந்தில் இந்திய கைத்தறி ஜவுளிகள்:

நியூஜீலந்தில் மில் ஜவுளிகளுக்கு கண்ட்ரோல் விதிக்கப்பட்டுள்ளதால் இந்திய கைத்தறி ஜவுளிகளுக்கு ஆதரவு ஏற்பட்டிருக்கிறது, வியாபாரிகளும் ஏஜண்டுகளும் நியூஜீலந்திலிருக்கும் இந்திய வர்த்தக கமிஷனர் காரியாலயத்தில்வந்து இந்திய கைத்தறி ஜவுளி ரகங்களின் சாம்பிள் புஸ்தகங்களைக் கேட்டவண்ணமிருக்கின்றனர்.

(a) நியூஜீலந்துக்கு அவசியமான ரகங்களில் பலவித கலர்களில் பிரிண்ட் செய்யப்பட்ட பெண்களுக்கான ஜவுளி ரகங்களும் இருக்கின்றன. உத்தரப்பிரதேசம், சாவியாபாத் ஆகிய இடங்களில் உற்பத்தியாகும் நர்ஸரி துணிகள்எல்லா கலர்களிலும் அவசியப்படுகிறது. உள்ளூரில் சாயம் போட்டுக் கொள்வதற்கு வசதியாக இருக்கும் டிரில்களும், கிரே ஷர்ட்டிங்குகளும் அடுத்தபடியாக விரும்பப்படுகின்றன.

(b) பீகாரிலும், நம்மாகாணத்திலும் உற்பத்தியாகும் கைத்தறி ஜவுளிகள் (அதாவது படுக்கை விரிப்புகள், மேஜை விரிப்புகள், திரைச்சீலைகள்) பலடிசைன்களில் உள்ளவை நியூஜீலந்தில் நல்ல மார்க்கெட்டைப் பிடித்துக் கொள்ளக்கூடியவை. இங்குள்ள வர்த்தகர்கள் அதைப்பற்றி பத்திரிகைகளில் விளம்பரம் செய்தால் அது சுலபமாக இருக்கும்.

(c) உத்தரப் பிரதேசத்தில் உற்பத்தியாகும் பாய்கள். முகம் துடைக்கும் டவல்கள் ஆகியவை இங்கு விரும்பப்படுகின்றன.

(d) இவைகள் தவிர மேஜைத் துணிகள், நாப்கின்கள் போன்ற உணவு நேர லினன் ரகங்களையும் எடுத்துக் கொள்வதில் விருப்பமிருப்பதாகத் தெரிகிறது. ★

நேயர்களே.

அடுத்த மாத இதழ் 12 பக்கங்களுடன் 2 அணா விலையில் தான் வெளிவரும். ஏனெனில் நமது "கைத்தறி" அக்டோபர் மாதத்துடன் இரண்டு ஆண்டுகளைத் தாண்டி மூன்றாவது ஆண்டைத் தொடங்குகிறது. எனவே, அக்டோபர் இதழை இரண்டாவது ஆண்டு மலராகவும். தீபாவளி மலராகவும் வெளியிட முடிவு செய்துள்ளோம்.

கடந்த இரண்டாண்டுக்குள் "கைத்தறி" கடல் கடந்தும் பல நேயர்களைத் தேடிக்கொண்டுள்ளது. தமிழ் நாட்டில் பல்லாயிரக் கணக்கான வாசகர்களையும், ஆதரவாளர்களையும் 'கைத்தறி' ஆகர்ஷித்துள்ளது என்பதை மகிழ்வோடு நமது நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சென்ற முதலாவது ஆண்டு மலரைக் காட்டிலும் சிறப்பான முறையில் இவ்வாண்டு மலர் வெளிவர எல்லோருடைய ஒத்துழைப்பையும் 'கைத்தறி' நாடுகிறது. கடந்த இரண்டு வருடங்களாக நீங்கள் அதன் வளர்ச்சிக்காக பல்வேறு வகைகளிலும் உதவியதை 'கைத்தறி' நன்றியறிதலுடன் நினைவில் கொள்ளுகிறது.

மலரில் பல புதிய அம்சங்கள் சேர்க்க முயற்சிக்கிறோம், தமிழ் நாட்டின் தலைசிறந்த தொழில் அறிஞர்கள், புதுமை எழுத்தாளர்கள் தங்களின் தொழில், இலக்கிய மேதையை 'கைத்தறி'யில் பூட்டி ஓட்டப் போகிறார்கள்.

மலரைச் சிறப்பிக்க நெசவாளர் கூட்டுறவு ஸ்தாபனங்களும், வர்த்தகர்களும் தங்களின் விளம்பரங்களைக் கொடுத்து உதவமுன்வரவேண்டுமென்று 'கைத்தறி' வேண்டிக்கொள்கிறது.

—ஆசிரியர்.

29 MAY 1955

கைத்தறி

வேட்டி புடவைகள் நெய்திடுவான் — அவன்
வீட்டிலே பார்த்தால் துணிப் பஞ்சம்;
—திருமூர்த்தி.

★ கோவை 15—8—51. ★

பாகிஸ்தான் விளையாடுகிறது

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும், எங்கு திடீரென்று யுத்தம் மூண்டுவிடுமோ என்ற பீதி இன்று நிலவி வருகிறது. குறிப்பாக கைத்தறி ஜவுளி வியாபாரிகள் இதுபற்றிப் பெரிதும் கவலை கொள்ளுகிறார்கள். இந்தியா-பாக் யுத்தம் வந்தால் கைத்தறி ஜவுளியின் மார்க்கெட் பெரிதும் பாதித்துவிடும் என்பதே அவர்களின் கவலைக்குக் காரணம்.

சரியாக ஆறு மாதங்களுக்கு முன்தான் இந்தியா-பாக் வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டது. அதற்குப்பின் கைத்தறி ஜவுளியின் மார்க்கெட்டும் சுறு சுறுப் படைந்து ஓரளவு நல்ல லாபமும் சம்பாதித்தார்கள். இந்த ராஜ்யத்தின் கைத்தறி ஜவுளிக்கு பாகிஸ்தான் ஓர் சிறந்த மார்க்கெட்டாக இருந்து வருவதால், சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள் மட்டுமின்றி, நெசவாளர்களும் இந்த யுத்த சல சலப்பைப் பற்றிக்கவலை கொள்ளுவது இயற்கையே.

இந்தியா-பாக் பிரச்னையை வெறும் வியாபாரக் கண்கொண்டு மட்டும் நாம் பார்க்கக்கூடாது. அப்படிப் பார்ப்பது தவரானதாகும். நமது சொந்தத்தாய் நாட்டின் கவுரவம் காற்றில் பறக்க, நெசவாளர்களாகிய நாம் சம்மதிக்கமாட்டோம். எனவே இந்த யுத்தப் பயமுறுத்தலுக்கே அடிப்படையாகவுள்ள காஷ்மீர் பிரச்னையைப் பற்றி ஆராய்வோம்.

காஷ்மீர், எழில்மிக்க இயற்கைப் பொலிவோடு காட்சியளிக்கும்நாடு மட்டுமல்ல; கம்பளத் தொழிலில் உலகிலேயே தனக்கு நிகரில்லையென்று கூறிக்கொள்ளும் பெருமைமிக்க நாடு மட்டுமல்ல; உலக வல்லரசுகளின் பார்வையில் அது ஓர் கேந்திரமான யுத்த தளமாகவும் பாவிக்கப்படுவதால்தான் சுண்டைக்காய் பாகிஸ்தான் பிரிட்டிஷ், அமெரிக்க சர்க்கார்களின் மறைமுக ஆதரவோடு நம்மை நோக்கிக் கொக்கரிக்கிறது.

நேருஜீயின் அயல் நாட்டுக் கொள்கை மட்டும் அமெரிக்காவின் பக்கமாக சாய்திருக்குமானல் காஷ்மீர் விவகாரம் தீர்க்கப்பட்டு எவ்வளவோ நாளாகியிருக்கும். அதற்குப் பதில் பிரச்னைகளின் தன்மைகளைக் கொண்டே தனது சுயேச்சையான முடிவை நேரு கடைப் பிடிப்பதால் தான், கடந்த இரண்டு ஆண்டுகளாக ஐ. நா. காஷ்மீர் பிரச்னையை தீர்ப்பதில் காலம் கடத்திக் கொண்டே போகின்றது.

இந்தியாவுக்கு இலவசமாக கோதுமை தருவதாகப் பசப்பி நம் ஆதரவைத் தேட முயற்சி செய்தது அமெரிக்கா. இன்று துணியும், நூலும் உற்பத்திசெய்யப் போதுமான பருத்தி நம்மிடம் இல்லையென்று தெரிந்ததும், இங்கு நூலுக்காக நெசவாளர்கள் நடத்திவரும் கிளர்ச்சியைக் கண் கொத்திப் பாம்புபோல் கவனித்து வந்த அமெரிக்கா, "யு. எஸ். பருத்தி மார்க்கெட்டில் விற்க 35,00,000 பேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது'' என்ற செய்தியை வெளியிடுகிறது,

இதன் மூலம், இந்தியாவில்உள்ள பஞ்சாலை முதலாளிகளினுடையவும், கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர்களுடையவும், ஆதாவைப் பெறமுடியும் என எண்ணி அமெரிக்கா ஆசை காட்டுகிறது. இதற்கெல்லாம் இந்தியா ஏமாந்த நாடல்ல என்பதை நிகழப் போகும் சம்பவங்கள் நிரூபிக்கும்என்பதில் ஆட்சேபணையில்லை.

ஆசிய கண்டத்தில் இந்தியாவும், சீனவும் பிரிட்டிஷ், அமெரிக்கப் பிடிப்புகளிலிருந்து விடுபட்டு சுதந்தரமாக இருப்பது பிரிட்டிஷ்—அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்குக் கண்ணை உறுத்துகிறது. தங்களின் சுரண்டல் கொள்கை இங்கு சுக்கல் சுக்கலாக்கப்பட்டது மட்டுமின்றி, வேற்று நாட்டாரின் விடுதலை வேட்கைக்கு இந்தியாவும், சீனவும் ஆதர்சமாக இருப்பதும் அவர்களுக்கு ஆபத்தாகப் படுகிறது,

ரஷ்ய, சீன கம்யூனிஸ்ட் பூச்சாண்டி காட்டி பாக்கிஸ்தானை தன்வலையில் விழவைத்தது போல இந்தியாவையும் விழவைக்க முடியுமென்ற நம்பிக்கைகளை பூரணமாக இழந்த பின்பே, தீர்க்கப் படாத காஷ்மீர் பிரச்னையை வைத்துக்கொண்டு, பாகிஸ்தான் மூலம் இந்திய மக்கள் உள்ளத்தில் யுத்த பீதியைக் கிளப்பிவிட்டு, மத்யஸ்தக்காரன் வேஷம் போடுகிறது அமெரிக்கா.

"யு. எஸ். ராஜாங்க உதவி மந்திரி ஸ்ரீ ரஸ்க், அமெரிக்கா உதவியளித்தால் மதில் மேல் பூனைகளாக ஆசியாவில் உள்ள நாடுகளைத் தங்கள் பக்கம் சேர்த்துவிட முடியுமென்று கூறியுள்ளார்" என்றசெய்தியே அமெரிக்கா ஆசியா மீது கொண்டுள்ள மோகத்தை வெளிப்படுத்தப் போதுமானதாகும். உலகில் எந்த கோஷ்டியோடும் சேராமல் நடுநிலைமை வகிக்கும் இந்தியாவைத் தான் மதில்மேல் பூனைஎன்கிறார் ரஸ்க். இதற்கு உதவியளித்தால் தங்கள் பக்கம் சேர்த்துக்கொள்ள முடியுமாம்.

தங்களுடைய உலக ஆதிக்க வேட்டைக்கு இந்தியாவும் உடன்பட வேண்டுமென்று கூறுகிற போதே, அமெரிக்கா ஏதோஉலக சமாதானத்திற்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ளதாக வேறு பறைசாற்றிக் கொள்கிறது. தவிர, இந்தியா பிரிட்டிஷ்காமன் வெல்த்திற்குள் இருந்தும் கூட, காமன்வெல்த் நாடுகளில் ஒன்றான பாகிஸ்தானுக்கு வெள்ளை அரசாங்கம் தனது போர்த் தலைவன் ஒருவனை— ஆகின் லெக்கை யுத்த தயாரிப்புகள் செய்து தர — திட்டம் வகுத்துத்தர உதவியிருக்கிறதென்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆகின்லெக் இரண்டாவது உலக யுத்த காலத்தில் இந்தியாவில் இருந்தவன்; இந்தியாவின் படைபலம், ஆயுதபலம் போன்ற ரகசியங்களை அறிந்தவன். தவிர இங்கு எந்த இடத்தில் சுலபமாகத் தாக்க முடியும் என்பதற்கு பூகோள ரீதியான விவரங்களும் அறிந்தவன். கிழக்கு, மேற்குப் பாகிஸ்தானில் கடந்த 4 மாத காலம் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறான். இருட்டடிப்பு ஒத்திகைகள்போன்ற யுத்ததயாரிப்புகளில் பயிற்சியளித்துள்ளான் பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகளுக்கு.

இந்த ரகசியம் வெளியான பின்பே நல்லவனைப் போல பிரிட்டிஷ் சர்க்கார்ஆகின்லெக்கைத் திருப்பி அழைத்துக் கொண்டிருக்கிறது. மொத்தத்தில் காஷ்மீரைப் பகடைக் காயாக வைத்து இந்தோ-பாக் யுத்தத்தைத் தூண்ட பிரிட்டிஷ்—அமெரிக்க போர் வெறியர்கள் பெரிதும் முயற்சிக்கிறார்கள். அதற்கான நடைமுறை வேலைகளிலும் ஈடுபட்டுமிருக்கிறார்கள். அந்த தைரியத்தில் தான் லியாகத் அலி முஷ்டியை உயர்த்தியிருக்கிறார். ஒரு நாட்டின் பிரதமர் செய்யும்வேலையா இது?

சோவியத் செஞ்சேனைக்கு சமமாக இந்தியர்கள் சென்ற யுத்தத்தில் உலகப் புகழ் பெற்றுள்ளது அறிந்தும் லியாகத் இந்தியாவை மிரட்டுகிறார். காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்க நேரு சொல்லுகிற ஆலோசனையைப் புத்திசாலித்தனமாக ஏற்றுக் கொள்வதே பாகிஸ்தானுக்கு நல்லது. அதை விடுத்துப் போர் தொடுப்பது எனில், பெற்ற சுதந்திரத்தை ரத்தம் சிந்தியும் காப்போம் என்பது மட்டும் உறுதி.

●

நேஷனல் பிரின்டிங் & டையிங் ஒர்க்ஸ்

49/15, தாராபுரம் ரோடு, :: திருப்பூர் P. O.

நாங்கள் மக்களின் நாகரீக வளர்ச்சிக்கேற்ப, எழில்மிக்க பல வர்ணங்களில் புத்தம் புதிய பம்பாய் டிஸைன்களில் சேலை, சீட்டி ரகங்களும், டிச்சார்ஜ் ரகங்களும் திறமைமிக்க வேலையாட்களைக் கொண்டு உத்திரவாதமுள்ள. கெட்டிச் சாயங்களில் பிரின்ட் செய்கிறோம்.

ஜவுளி வர்த்தகர்கள் எங்களின் சேவையை உபயோகப் படுத்திக்கொண்டு தங்களின் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டுகிறோம்.

M. K. சின்னப்ப கவுண்டர்,
உரிமையாளர்.

கோபிசெட்டிபாளையம் நெசவாளர்

கூட்டுறவு சங்கம் லிமிடெட்,

கச்சேரி வீதி, கோபிசெட்டிபாளையம் P. O.

அழுத்தமான நெசவு! கெட்டிச் சாயம்!

நாங்கள் 26, 30, 40 நெம்பர் நூல்களில் கலர்ஷர்ட்டிங் பீசுகள், வேஷ்டி, துண்டு மடிகள், வெள்ளை, காரிக்கன் காடா பீசுகள், போன்ற ரகங்களை திறமைமிக்க எங்கள் சங்க அங்கத்தினர்களின் சொந்தத் தறிகளில் புத்தம் புது மோஸ்தர்களில் தயார்செய்து வருகிறோம்.

ஏற்றுமதியாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும் விசேஷ சலுகைகள் உண்டு.

விவங்களுக்கு எழுதக் கோருகிறோம்.

K. S. முத்துக்குமார், தலைவர்.

வேலைதேடி குடி பெயர்ந்து செல்கின்றனர்

1951 ஜனவரி முதல் ஆகஸ்ட் 2—8—51 தேதிவரை 8 மாதங்களுக்குமாகச் சேர்ந்து தறி ஒன்றுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நூல் 1 கட்டும் 2 களியும்தான்! இந்த நூலும் இன்னும் 600 தறிகளுக்குமேல் ஈரோடு ஏரியாவில் கொடுக்கப்படவில்லை.

எங்கள் ஈரோடு ஏரியாவில் ஒரு தறி 8 நாள் வேலை செய்யத் தேவையான 72கிஜம் நெய்யப்பாவு கோய்வதற்கு (ஊடைக்கும், பாவுக்கும் சேர்ந்து) 20 நெம்பர் நூல் 2 கட்டும், 5 களியும் தேவையாகும். 8 நாள் வேலைக்கே இவ்வளவு நூல் தேவையிருக்க, மொத்தம் எட்டு மாதங்களுக்கும் சேர்ந்தே ஒரு கட்டும் 2 களியும்தான் கிடைத்திருக்கிறதெனில் நெசவாளி எப்படி உயிர்வாழ முடியும்?

பல கிராமங்களைச் சேர்ந்த நெசவுத்தொழிலாளர்கள் குடும்பமாக எங்கள் ஏரியாவிலிருந்து வேலை தேடி வேற்றூர்களுக்கு குடி பெயர்ந்து சென்றுவிட்டார்கள். பலர் சொல்லொண்ணு துன்ப துயரங்களுக்கு ஆளாகியுள்ளனர். சர்க்காரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் தக்க கவனம் செலுத்தவில்லையெனில் நிலைமை மிகவும் மோசமாகப் போய்விடும்.

எனவே, மாதம் குறைந்த பட்சம் ஒரு கட்டு வீதமாவது தொடர்ந்து நூல் சப்ளை செய்துவர சர்க்கார் தக்க ஏற்பாடு செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஈரோடு, 3—8—51. } எஸ். பி. கருப்பண்ணமுதலியார்,
தலைவர், நூல் ஆலோசனைக் கமிட்டி

மங்கலம் கிராம நெசவாளர்கள் துயர்

எங்கள் ஊரில் சுமார் 50 நெசவாளர் குடும்பங்களிலுமாகச் சேர்ந்து சுமார் 150 தறிகள் உள்ளன. இவைகளுக்கு தறி ஒன்றுக்கு சென்ற மாதம் 30 நெ. நூல் 5 ராத்தல்தான் வினியோகம் செய்தனர். அந்த நூலை நெய்து முடிப்பதற்குள் துணியின் விலை இறங்கிவிடவே கூலியேயில்லாமல் போய்விட்டது. இந்த மாதம் இன்னும் நூல் கொடுக்கப்படவில்லை.

நூல் சப்ளை செய்தாலும் ஜவுளி விலை இறக்கத்தால் கூலியே கிடைக்காது போலிருக்கிறது. இந்நிலையில் பட்டினிக்கு இரையாவதைத் தவிர வேறு வழி இருப்பதாகவே தெரியவில்லை.

இந்த ஊர் நெசவாளர்கள் வேறு தொழில் செய்ய வகையோ, பொருள் வசதியோ இல்லாத எளிய குடிகளாகையால் எல்லோரும் பிச்சையெடுக்கப் புறப்படும் நிலையிலேயேயுள்ளனர். கடந்த

சேலத்தில் நெசவாளர் தினம்.

கைத்தறி ஆடைகளையே அணியுமாறு மக்களுக்கு வேண்டுகோள்.

சேலம் கைத்தறி நெசவாளர் ஐக்ய சங்கத்தின் சார்பாக ஆகஸ்டு 1ந் தேதியன்று நெசவாளர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அன்று போஸ் மைதானத்தில் திரு- ஆர். எஸ், பெருமாள் செட்டியார் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

நெசவாளர் தினத்தின் முக்யத்வம் பற்றியும், ஆண்டுதோறும் ஆகஸ்டு மாதம் 1-ந்தேதியை நெசவாளர்கள் ஏன் தங்கள் தினமாக அந்நாளைக் கொண்டாட வேண்டுமென்றும். மேற்படி சங்கத்தின் செயலாளர் ஜி. இ. மோஹலிங்கம் விரிவாக எடுத்துப் பேசினர்.

பின் கீழ்க்கண்ட தீர்மானங்களை சுப்ரமணிய செட்டியார் பிரரேபிக்க திரு. முத்தியாலு ஆமோதிக்க ஏகமனதாக நிறைவேறின. தீர்மானங்களாவன;

(1) சென்ற சில மாதங்களாகவே சேலம் நகரிலுள்ள நெசவாளர்களுக்குப்போதிய நூல் சப்ளை செய்து வராததால் பலவித கஷ்டங்களை அவர்கள் அனுபவித்தும், பிச்சை எடுத்தும் வயிறு வளர்க்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வந்துவிட்டனர். இனியேனும் மாதா மாதம் குறைந்த பட்சம் தறி ஒன்றுக்கு 5 ராத்தல் நூலாவது கொடுத்துவர வேண்டுமென்றும், தற்போதுள்ள நூல் விலைகளை மேலும் குறைக்க வேண்டுமென்றும் சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

(2) நாட்டின் நெருக்கடியான நிலைமையை உத்தேசித்து ரயில்வே தொழிலாளர்களும், தபால், தந்தி ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவேண்டாமென இக்கூட்டம் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

(3) பொதுமக்களும் நெசவாளர்களும் தங்களது துணித் தேவையைப் பூர்த்திசெய்து கொள்ள கைத்தறி ஆடைகளையே வாங்கி அணியுமாறு இக்கூட்டம் வேண்டிக் கொள்கிறது. முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது முடிந்தது. (ந.நி.)

இரண்டு மாதங்களாக ஏற்பட்டுள்ள நிலைமையையும், சமீபத்தில் நூல் கிடைக்குமென்ற நம்பிக்கையுமில்லாததால் கலக்டரைக் கண்டு பரிகாரம் காண ஒரு தூது கோஷ்டியாகச் செல்வதென்று எங்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இப்படிக்கு,
28—7—51, மங்கலம். } எஸ். பழனிசாமி,
காரியதரிசி, கை. நெ. தொ. சங்கம்

எங்கள் துயர் நீக்காத சர்க்காரை நாங்கள் ஆதரிக்கமாட்டோம்.

கோ. கை. நெ. தொ. சங்க உபதலைவரின் அறிக்கை.

கைத்தறி நெசவாளர்களின் நிலைபற்றிப் பன்முறை சர்க்காருக்கு எடுத்துக் கூறியும், கஷ்டங்களைத் தீர்ப்பதாக பத்திரிகைகள் மூலமாகவும், வாயளவிலும்தான் பரிகாரம் கூறப்பட்டதே தவிர, நடைமுறையில் சிறிதும் நல்ல பலன் பிறக்கவில்லை.

தொழில் மந்திரி ஹரிகிருஷ்ண மஹதாப் கோவைக்கு வந்தபோது பேட்டி கண்டு கேட்டதற்கு சென்ற பிப்ரவரியிலிருந்து அதிகமான நூல் கிடைக்குமென்றுகூறினர். மாதங்கள் ஆறு ஆகியும் கிடைக்கும் நூலின் அளவு அவரின் வாக்குறுதிப்படி அதிகமாகவில்லை. அதற்குப் பதில் 3, 2, 1 பவுண்டாக படிப்படியாகக் குறைக்கப்பட்டது.

கோவை நெசவாளருக்குக் கிடைக்கும் நூலின் அளவு மேற்கூறியபடி இருக்க, சமீபத்தில் சென்னைக்கு வந்த மஹதாப் அவர்கள் தறி ஒன்றுக்கு 14 ராத்தல் நூல் கிடைத்திருக்கவேண்டுமேயென்றுதைரியமாகக் கூறுகிறார். அத்துடன் அவர் தனது தீர்க்க தரிசனத்தை நிறுத்திக் கொள்ளாமல், வரப்போகும் மாதங்களில் கைத்தறிஜவுளிக்குமார்க்கெட் இருக்காது என்று வேறு "புதிர்"விட்டு விட்டுப் போயுள்ளார்.

குடிசைத் தொழிலான கைத்தறி நெசவுத் தொழிலின் முன்னேற்றத்திற்கும், அதன் அபிவிருத்திக்கும் வழிசெய்து கொடுக்கப் பொறுப் பேற்றுக் கொண்டிருக்கும் ஒருவர் பேசும் பேச்சாக இல்லை அவரின் பேச்சும, வாக்குறுதிகளும்,

கடந்த 11 மாதங்களாக கோவை நெசவாளிக்கு சர்க்கார் கொடுத்துள்ள மொத்தம் நூல் 44½ பவுண்டுகளாகும். இதைக்கொண்டு அவன் நெய்த துணி 375 கெஜங்களாகும். அதில் செலவு நீக்கிக் கூலியாகக்கைக்கு வந்தது ரூ. 315. ஒரு மாத வருமானம் ரூ. 26-4-0 ஆகிறது. இதற்கு அவனது குடும்பமே தொழிலில் ஈடுபடவேண்டியிருந்தது என்பதை நேயர்கள் கவனிக்கவேண்டும், இக் குறைந்தபட்ச வருவாயைக் கொண்டுதான் அவனும் குடும்பமும் வீட்டு வாடகை, சாப்பாடு, துணி, வைத்தியம் போன்ற வாழ்க்கைத் தேவைகளையெல்லாம் கோவை நகரத்தில் சரி செய்து கொள்ள வேண்டுமென்றால் அந்த வாழ்க்கையின் நரக வேதனையை இங்கு விவரிக்கவும் வேண்டுமா?

இது சொந்தத் தறிகாரனுடைய நிலையென்றால், கூலி நெசவாளியின் வாழ்க்கையை இங்கு வர்ணிக்கவும் வேண்டுமோ. சுருக்கமாகச் சொல்வதெனில் அவன் வாழ்வு நித்ய பட்டினிதான்.

3 ராத்தலுக்கும் குறைவான நூல் 100 நெம்பரில் கொடுத்தால் அதை நெய்யமுடியாது. காரணம்; பாவுக்கும், ஊடைக்கும் போதாது என்பதால்தான். அதனால் நெசவாளி கள்ளமார்க்கெட்டை நாடியே உயிர்வாழ வேண்டிய நிலைக்கு சர்க்காரின் நூல் வினியோகத் திட்டம் அவனைக்கொண்டு போய் விட்டிருக்கிறது என்றால் அதில் ஆச்சரியப்படவேண்டியது ஒன்றுமில்லை

மீறி என்போன்ற நெசவாளர்கள் கள்ள மார்க்கெட்டையே நம்பி குடும்பத்தைக் காப்பாற்ற சென்றாலும் போதிய வருவாய் கிடைப்பதில்லை. எனவே இந்தி நிலையைக் கொஞ்சமும் அறியாத சிலர் எங்கள் மீது குற்றம் சாட்டி பத்திரிகைகளில் எழுவதைப்பார்த்தால் அவர்களின் அறிவீனத்தைக் கண்டு நாங்கள் கண்டிக்க வேண்டியேற்படுகிறது.

எங்கள் நிலை என்று சீர்படும்? விரைவில் சர்க்கார் எங்களின் துயர்க் கதையைக் கேட்டுப் பரிகாரம் காண முயலுமா? ஒன்று மட்டும் நிச்சயம்; இந்நாட்டின் தொன்மைமிக்க தொழிலைச் செய்து வாழுகின்ற நெசவாளர்களாகிய எங்களைப் பற்றிக் கவலைப்படாத எந்த சர்க்காரையுமே நாங்கள் ஆதரிக்கமாட்டோமென்பது மட்டும் உறுதி.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது. இதோடு வருடக் கடைசியில் கிடைக்கும் போனஸ் டிவிடெண்டையும் சேர்த்தால் தறி ஒன்றுக்கு ரூ. 20 வரை வரலாம், இதையும் வீட்டுத் திட்டத்திற்குச் சேர்த்துக் கொண்டால் வருடத்திற்கு ஒரு குடும்பத்திலிருந்து ரூ.260 வரை வருகிறது. இதில் அவர் ஒரு வீட்டிற்கு ஒரு வருடத்தில் கட்ட வேண்டியதொகை சுமார்ரூ. 250 வரைவரலாம். ஆகையால் கடனை அடைத்து விடலாம்- ஆனால் நெசவாளருக்கு இந்த அளவாவது நிரந்தரமாகக் கூலி கிடைத்தாலொழிய இக் கடனை நெசவாளர் அடைக்க முடியாது. அதற்கான வழி வகைகளைச் செய்வது ஒவ்வொரு சங்கத்தின் கடமையாகும்.

நெசவாளரின் வீட்டுக்கஷ்டத்தை நீக்க இப்படிப்பட்ட திட்டங்களை ஒவ்வொரு நெசவாளர் கூட்டுறவு சங்களும் ஏற்று நடத்த முன் வருமேயானால் நம் நெசவாளரின் நிலை மேலும் வளர்ச்சியடையும். இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு மற்றும் பல திட்டங்களையும் நிறைவேற்ற நமக்கு ஊக்கம் ஏற்படும்.

ஆறு அவுன்ஸ் உணவு!

சென்னை ராஜ்ய மக்கள் இந்த ஆண்டு 'சுதந்திர தின'த்தை சொல்ல முடியாத அளவு அதிர்ப்தியோடு தான் கொண்டாடி யிருப்பார்கள். "ஐந்து வருஷங்களுக்கு முன்னால் பொறுப்பற்ற அன்னிய சர்க்கார் ஆதிக்கம் செலுத்தியபோதுகூட நன்றாக இருந்தோமே; இப்போது நம்மவர்கள் ஆட்சி செலுத்தும் 'சுதந்திர' காலத்தில் அரைப் பட்டினிகிடந்து அவதிப்பட நேர்ந்துவிட்டதே" என்ற கசப்பான நினைப்பைத்தான் ஆகஸ்டு 15 கிளறிவிட்டிருக்கும்.

5-வது 'சுதந்திர' ஆண்டு பிறப்பதற்கு மூன்று நாள் முன்னாலிருந்து அரிசிரேஷன் ஆறு அவுன்ஸாகக் குறைந்து விட்டது. "எட்டவுன்ஸ் அரிசியை எக்காரணத்தாலும் குறைக்கமாட்டோம்" என்று கொடுத்த வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டு, எட்டை ஆறாக்கிவிட்டது சென்னை அரசாங்கம். அது போதாது என்று நினைத்தோ என்னமோ அரிசியின் விலையையும் உயர்த்திவிட்டது. இந்த அரசாங்கம் அதிகாரப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது சென்னை ராஜ்ய மக்கள் முழுசாக பனிரெண்டு அவுன்ஸ் அரசி ரேஷன் பெற்றார்கள். இன்று அது அரைவாசியாகத் தேய்ந்து விட்டது. கேட்கவா வேண்டும் "கண்ணினு மினிய சுதந்திரம்" கசப்பாகத் தோன்றுவதற்கு?

சென்னை மாகாணத்துக்கான அரிசிக் கோட்டாவை அதிகரிக்க முடியாது என்று மத்திய சர்க்கார் 'கைவிரித்து' விட்டதால் அரிசி ரேஷனைக் குறைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று அரிசிக் குறைவுக்கு சென்னை சர்க்கார் சமாதானம் கூறுகிறது. இந்த நொண்டிச் சமாதானம் நமக்கு அறுவருப்பையும், ஆத்திரத்தையுமே உண்டு பண்ணுகிறது.

இந்த எரிச்சலான செய்தி நமக்குக் கிடைத்த நேரத்தில் மத்திய சர்க்காரின் உணவு மந்திரி முன்ஷி கோவை வந்திருந்தார். அவர் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

"வெளி நாடுகளிலிருந்து சாத்தியமான அளவு அரிசி தருவிக்க இந்திய சர்க்கார் முயன்றனர். மலிவான அரிசியைப் பெரும் அளவில் இறக்குமதிசெய்ய பிரயத்தனம் செய்தோம் இம்முயற்சி வெற்றியளிக்கவில்லை. அதிக விலை கொடுத்தே அரிசி தருவிக்க முடிந்தது"

ஆர். எம். கண்ணபிரான்.

"மலிவான அரிசியைப் பெருமளவில் அனுப்பிவைப்பதில் ஒரு கெடுதல் இருக்கிறது. இதை சென்னையின் நன்மைக்காகவே சொல்லுகிறேன். **உலக நிலைமை மாறிக்கொண்டிருக்கிறது ஆகவே நாம் உணவு வாடிக்கைகளையும் மாற்றிக் கொள்வதற்குத் தயராக இருக்கவேண்டும்**"

மந்திரி முன்ஷி மகா நெஞ்சழுத்தக்காரர். சென்னை மக்களுக்கு முன்னால் வந்து இப்படிப் பேச அவருக்கு எவ்வளவு தைரியம் இருந்திருக்கவேண்டும்?

சென்னை மக்களின் பிரதான உணவு அரிசிதான். உபப் பொருள்களெதுவுமில்லாமல் வெறும் உப்பையும் மிளகாயையும் வைத்துக்கொண்டு கூட எத்தனையோ ஏழை மக்கள் கஞ்சியோடு அரிசி சாதத்தைச் சாப்பிட்டு விடுகிறார்கள். கோதுமைச் சப்பாத்தி செய்து சாப்பிட நேரமோ, வசதியோ இங்குள்ள ஏழைகளுக்கு இல்லை. எப்படி வெறும் கேள்வரகை மட்டும் சாப்பிட்டு முன்ஷி காலம் கடத்த முடியாதோ, அப்படித்தான் சென்னை மக்களில் பெரும்பாலோரால் அரிசி இன்றி இருக்கமுடியாது. இந்த உண்மையை மந்திரி முன்ஷி கோவைக்கு வருவதற்கு முன்னால் அவருக்கு தெரிந்திராவிட்டாலும் சென்னை உணவு மந்திரி அவருக்கு உணர்த்தி இருப்பார். இருந்தும் மந்திரி முன்ஷி நெஞ்சில் ஈரமில்லாமல் இப்படிப் பேசிவிட்டுப் போயிருக்கிறார்.

கிடைக்கும் அரிசி எல்லாவற்றையும் வாங்குவதாகக் கூறும் முன்ஷி திரைமறைவில் 'நாசவேலை' செய்து வருகிறார் என்று பம்பாயிலிருந்து வெளியாகும் ஒரு பத்திரிகை தெளிவுப்படுத்தியிருக்கிறது. பொதுமக்களுக்கும் ஒருவிஷயம் ஞாபகமிருக்கலாம். சென்ற ஆண்டு கடைசியில் நாம் உணவுப்பொருள்களுக்கு ஆலாய் பறந்து கொண்டிருந்தபோது, இந்திய சர்க்கார் சீனாவிடம் 10 லட்சம் டன்கள் அரிசி கேட்டனர். சீனாவும் தர சம்மதித்தது. ஆனால் சீனாவுடன் செய்துகொள்ளப்பட்ட உணவு ஒப்பந்தம் வெறும் 4 லட்சம் டன்களுக்கு மட்டும்தான்! சீனா கொடுக்க ஒப்புக்கொண்ட 10 லட்சம் டன் அரிசியையும் பெற்றுக்கொள்ள ஏன் இந்தியா ஒப்பந்தம் செய்துகொள்ளவில்லை என்பதை முன்ஷி தெரிவிக்கவில்லை. அது இன்னும் மர்மமாகவே இருந்து வருகிறது. இதுதான் அவர் கிடைக்கும் அரிசி எல்லாவற்றையும் இறக்குமதி செய்யும் லட்சணம்!

முன்ஷி "ஜீ"யின் நாசவேலை சீனாவோடுமட்டும்நின்றுவிடவில்லை. அது பர்மாவுக்கும், ரஷ்யாவுக்கும் அவரால் விஸ்தரிக்கப்பட்டது.

இந்த வருஷம் ஏப்ரல் மாதத்தில், இந்தியப் பிரதமர் பண்டித நேருவின் நேரடியான உத்தரவின்பேரில் சோவியத் ரஷ்யாவிலுள்ள நமது தூதர், சோவியத் சர்க்காரிடம் பத்து லட்சம்டன் கோதுமை கேட்டார். அதற்கு ஈடாக மாற்றுப் பொருள்களைத் தருவதாகக் கூறித்தான் அதைக் கேட்டார். நேருஜியின் கோரிக்கையை ரஷ்யா ஒப்புக்கொண்டு (வர்த்தக ஒப்பந்தம் போன்ற மாமூல் சடங்குகளுக்காகக்காலம் தாழ்த்தாது) உணவுப் பொருள்கள் சப்ளைசெய்ய முன்வந்தது. சில கப்பல்கள் உணவுப் பொருள்களை உடனடியாக ஏற்றிக் கொண்டு இந்தியாவுக்கும் வந்தன.

சோவியத் வர்த்தகக்கமிஷனர் இந்திய சர்க்காரின் உணவிலாகா காரியதரிசியிடம் இது சம்பந்தமாகப்பேச வந்தபோது ஒருஆச்சரியமூட்டும் சம்பவம் நடந்தது. இந்தியாவில்உணவுப்பொருள்கள் சேமிப்பு ஏற்பாடுகள் சரியாக இல்லாததால் துரிதமாக உணவுப் பொருள்கள் ரஷியாவிலிருந்து வருவதை முன்ஷியின் உணவு இலாகாவிரும்பவில்லை என்பதுதான் அது!

பல மாதங்கள் இந்தியாவுக்கு உணவு கொடுப்பதா இல்லையா என்று யோசனைசெய்து கொண்டிருந்த அமெரிக்காவிடம் மண்டியிட்டு உணவுப் பிச்சை கேட்ட முன்ஷியின்இலாகா நிபந்தனையேதுமின்றித் துரிதமாக அவர்களுடைய சொந்தக் கப்பல்களிலேயே உணவு சப்ளை செய்வதை விரும்பவில்லை. காரணம் சேமிப்பு ஏற்பாடுகள் சரியாக இல்லாததாம்!

கடைசியாக அந்த சோவியத் அதிகாரி முன்ஷியைக் கண்டு பேசி ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார். பண்டிதநேரு கேட்டது 10 லட்சம் டன். ரஷ்யா கொடுக்கஒப்புக்கொண்டதும் 10 லட்சம்டன் ஆனால்முன்ஷி ஒப்பந்தம்செய்து கொண்டது 1 லட்சம் டன்னுக்குத்தான்.

இந்திய மக்கள் பட்டினிகிடந்து மடிவதைப்பற்றி முன்ஷி கவலைப்படவில்லை. ரஷ்யாவிடமிருந்தோ, சீனாவிடமிருந்தோ உணவுப்பொருள்கள் தாராளமாக இறக்குமதியாகக்கூடாதுஎன்பதுதான் இவர் கவலை எல்லாம். அதே காலத்தில் அமெரிக்காவிடம் மட்டும் மண்டியிட்டு கெஞ்ச கொஞ்சமுங்கூட தயங்கமாட்டார். பட்டினி கிடக்கும் இந்திய மக்களின் பரமவிரோதிமுன்ஷி என்று கூறுவதில் தவறென்ன?

இது உணவுப் பொருள்கள் இறக்குமதியில்நடந்தநாசவேலை இனி உணவுப் பொருள்களின் விலை சம்பந்தமான 'நாசவேலை'யைக் கவனிப்போம்.

சில மாதங்களுக்கு முன்னால் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியாகி இருந்தது. ஒரு சர்க்கார் அதிகாரி கூறியிருந்தார்: "வெளிநாடுகளில் கிடைக்கின்ற உணவுப் பொருள்களில் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளில் கேட்கப்படும் விலை மற்ற நாடுகளில் கேட்கப்படும் விலையை விடக் குறைவானது" என்று.

இப்போது நமக்கு உயர்ந்த ரகமென ரூ. 1—6—0-க்கு விற்கப்படும் அரிசி சீனாவிலிருந்தும், சயாமிலிருந்தும் இறக்குமதியானவை என்று கூறுகிறது. இதில் சீனா அரிசிகொஞ்சம்தான். அந்த அரிசியின் விலை குறைவாக இல்லாது போனதற்கு இந்திய சர்க்காரின் உணவிலாகா அதை இறக்குமதி செய்ய அனுஷ்டித்த ஏற்பாடுகள்தான் காரணம்.

பம்பாயிலிருந்து வெளியாகும் 'பிளிட்ஸ்' பத்திரிகை கீழ் வரும் செய்தியைக் கொடுத்திருக்கிறது.

சீனாவில் சமீபத்தில் உருவான வர்த்தக ஸ்தாபனம் ஒன்று 50 லட்சம் டன் உயர்தர அரிசியை, டன் ஒன்றுக்கு 42½ பவுன் வீதம் கொடுப்பதாக இந்திய சர்க்காருக்கு அறிவித்தது. இதர நாடுகளில் அதைவிட மட்டமான அரிசிக்குக்கூட டன்னுக்கு 45 பவுனிலிருந்து 50 பவுன் வரை விலை கேட்கப்படுகிறது. குறைந்த விலையில் அரிசி சப்ளை செய்வதோடு அதைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கான கப்பல் வசதியையும் தானே செய்து தருவதாக அந்த வர்த்தக ஸ்தாபனம் கூறிற்று. அந்த அரிசி இந்தியா வந்து சேரும்போது கப்பல் செலவு உட்பட ஒரு டன்னுக்கு 46 பவுன்கள்தான் விலையாகும்.

மந்திரி முன்ஷியின் இலாகா அந்த அரிசியை உடனே வாங்கவில்லை. முதலில் ஸ்தாபனம் கண்ணியம் வாய்ந்ததாஎன்பதில் அவருக்கு சந்தேகம் தோன்றியது. அந்த சந்தேகத்தை டெல்லியிலுள்ள சீன தூதுவராலயம் நிவர்த்தி செய்தது. அதற்கப்புறம் முன்ஷியின் இலாகா 'நாங்கள் தனிப்பட்ட வர்த்தக ஸ்தாபனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளமாட்டோம்" என்று கூறி முரண்டு பிடித்தது.

சீன சர்க்கார், இரு சர்க்கார்களுக்குமிடையில் நடக்கும் வர்த்தகமாக அதை பாவித்துக்கொள்ளலாம் என்றுகூறிய பிறகு, முன்ஷியின் இலாகா ஒரு அதிகாரியை சீனாவுக்கு அனுப்பிற்று. அவர்கள் 42½ பவுனுக்குக் கொடுக்கத் தயாராக இருந்தஅரிசியை 45 பவுனுக்கு வாங்கும்படி அந்த அதிகாரிக்கு அதிகாரமளித்தது. வாங்கிய அரிசியை சீனக் கப்பல்களில் ஏற்றி ஹாங்காங்குக்கு அனுப்பி, அங்கிருந்து இந்தியாவுக்கு பிரிட்டிஷ் அமெரிக்கக் கப்பல்களில் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டது.

இதனால் சுமார் 46 பவுன்விலைக்குக் கிடைத்திருக்க வேண்டிய அரிசி நம்மிடம் வந்து சேரும்போது சுமார் 55 பவுனாக விலை உயர்ந்து போய்விட்டது.

இந்த ஏற்பாட்டின் மூலம் இந்திய மக்கள் மனதில் சீன அரிசி விலை மிகவும் உயர்வானது என்ற அதிர்ப்தியான எண்ணத்தை உண்டாக்கவும் முன்ஷிஜீயால் முடிந்துள்ளது.

உணவு இறக்குமதி சம்பந்தமாக இவ்வளவு தில்லுமுல்லுகளைச்செய்திருக்கும் முன்ஷிதான் கோவையில் தன்னுடைய இலாகா சாதிக்க முடிந்தவைகளை எல்லாம் சாதித்துத் தீர்த்துவிட்டதாக ஜம்பமடித்துவிட்டுப்போயிருக்கிறார்.

யுத்தகால அடிப்படையில் உணவு உற்பத்தியை அதிகரிப்போம்'' என்று பண்டித நேரு முழக்கமிட்டார். "1952-க்குள் சுய தேவைப் பூர்த்தியை அடைந்துவிட வேண்டும்'' என்று அவர் ஆசைப்பட்டார். அவர் தலைமையின் கீழ் உள்ள மத்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களுமாகச் சேர்ந்து 'அதிக உணவு உற்பத்தி இயக்க'த்திற்கு என்று 150 கோடி ரூபாய் வரை செலவழித்திருக்கிறார்கள். இவ்வளவு பணத்தைச்செலவிட்டும் கடந்த மூன்று வருடத்தில் ஆன அதிக உற்பத்தியென்னவோ வெறும் 25 லட்சம்டன்கள்தான்! 'அதிக உற்பத்தி இயக்கம்' தோல்வியடைந்து அதிக இறக்குமதி இயக்கத்தை சர்க்கார் ஆரம்பிக்க வேண்டி வந்துள்ளது.

பண்டித நேரு 'சுய தேவைப் பூர்த்தி திட்டம்' என்று கூறிவருவதைச் சிலர் கேலி செய்கிறார்கள். அவர்களைப்பற்றி நமக்குக் கவலையில்லை. இந்தியா தன் உணவுத் தேவைக்காக பிறநாடுகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டும் என்ற கேவலமான நிலைமை மாறவேண்டும் என்றுதான் நாம் விரும்புகிறோம். ஆனால் இந்திய சர்க்காருடைய உணவு உற்பத்தி இயக்கம் உண்மையிலேயே அதற்கு ஊக்கமளிக்கவில்லை என்பதுதான் நம் குற்றச்சாட்டெல்லாம்.

மே மாதம் வெளியான அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் "பொருளாதார விமர்சனம்'' என்ற பத்திரிகை கீழ் வருமாறு கூறியிருக்கிறது.

"அதிக உணவு உற்பத்தி இயக்கம் தோல்வியடைந்து விட்டது. பல் வேறு இலாக்காக்களிடையில் ஒற்றுமை இல்லாமலும், உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக சரியான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படாமலும், உணவு சேகரிப்பு அரை மனதுடன் மட்டும் நடைபெற்றும், வரும்போது உணவுக் கஷ்டம் பெருகாமல் இருக்கமுடியாது''

உண்மையிலேயே இன்று நிலவும் உணவுப்பற்றுக் குறைக்குக் காரணம் சர்க்காரின் நிர்வாகத் திறமைக் குறைவுதான். சரியானபடி உணவுப் பொருள்களை கொள்முதல் செய்வதில் சர்க்கார் அக்கரைஎடுத்துக்கொள்ளவில்லை மிகப்பெரிய நிலச்சுவாந்தாரர்களிடம் அணுகப் பயந்து விடப்பட்டுமிருக்கிறது. அதிகாரிகள் கொள்முதல் செய்தது எல்லாம் சாதாரணமான சிறு நிலச்சொந்தக்காரர்களிடம்தான்.

கீழ் காட்டப்பட்டுள்ள கணக்குகள் சர்க்காரின் உணவுக் கொள்முதல் சரியாக இல்லை என்பதை நிரூபிக்கும்.

சென்னை ஆக 2—

10 ஆயிரம்படி நெல்லும் 500 படி அரிசியும் பதுக்கியவர்கள்மீது சென்னை அரசாங்கத்தார்நடவடிக்கை எதுவும் எடுக்காமல் விட்டிருக்கின்றனர்.

சென்ற பிப்ரவரி 26ம் தேதி வியாசர்பாடியில் 5 வீடுகளை சென்னை நகர ரேஷன் அதிகாரிகள் சோதனை இட்டு 10 ஆயிரம்படி நெல்லையும் 500 படி அரிசியையும் பறிமுதல் செய்தனர். இதை ஒரு பிரத்யேக விஷயமாக பாவித்து, பறிமுதல் செய்யப்பட்ட நெல்லுக்கும் அரிசிக்கும் பணம் கொடுக்கசென்னை அரசாங்கத்தார் உத்தரவிட்டுள்ளனர் என்று தெரிகிறது.

அதே பத்திரிகையில், அதே தேதியில் மற்றொரு செய்தியும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

"அனுமதியில்லாமல் கூடையில் 15 படி அரிசியை கடத்திக் கொண்டு வந்ததாக மோகனம்பாள் என்ற பெண்மீது வழக்குத் தொடரப்பட்டது அவளுக்கு கோர்ட் கலையும் வரை காவலும ரூ. 10 அபராதமும்கட்டத்தவறினால் ஒரு வாரம் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது.

நம் மக்கள் அனைவருக்கும் ஒரு விஷயம் நன்றாகத்தெரியும்.

வருஷம்.	உற்பத்தி (1,000 டன்களில்)	சேகரிப்பு (1,000 டன்களில்)
1946	3723	118
1947	3955	100
1948	3888	53
1949	5139	48
1950	5123	44

இந்தக் கணக்குப்படி உற்பத்திபெருகியிருக்கிறது. ஆனால், கொள்முதல் குறைந்துகொண்டே வந்திருக்கிறது. சரியானபடி கொள்முதல் செய்திருந்தால் நம் நாட்டில் உணவுப் பஞ்சம் கடுமையாகி இருக்கவேண்டியதில்லை. சர்க்காருடைய உணவு சேமிப்பு இயக்கம் எப்படி நடக்கிறது என்பதை சென்னைப் பத்திரிகை ஒன்றில் வெளியாகி இருக்கும் கீழ்காணும் செய்தி நிரூபிக்கிறது.

ரேஷன்அரிசியோடு மட்டும் மிகப் பெரும்பாலோர் திருப்தியடைந்து விடுவதில்லை என்பதுதான் அது. சர்க்கார் கொள்முதலுக்குக் கிடைக்காத அரிசி மிகத் தாராளமாக வெளியில் கிடைக்கிறது. தற்போது அரிசிக் கடைகளில் விற்கப்படும் உயர்ந்த ரக அரிசியின் விலையைவிடக் குறைந்தவிலைக்கு உள்ளூர் அரிசி பகிரங்கமாக "கள்ள மார்க்கெட்'' செய்யப்படுகிறது.''

"இந்தக் கண்ட்ரோலும் ரேஷனும் இல்லாவிட்டால் தாராளமாக அரிசி கிடைக்கும்" என்று ஜனங்கள் பேசிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் ஏன் பேசுகிறார்கள்? அவர்களுக்கு முன்னால் தாராளமாகக் கள்ள மார்க்கெட் அரிசி நடமாடுவதால்தான்.

கள்ள மார்க்கெட்டை நசுக்க சர்க்கார் தயாராக இல்லை. ஏனென்றால் கள்ளமார்க்கெட் செய்பவர்கள் சர்க்காரிடம் செல்வாக்குப் பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் கண்ட்ரோல் ஒழிப்பை விரும்புகிறார்கள். கண்ட்ரோல் ஒழிந்துவிட்டால் அவர்கள் இஷ்டம்போல் லாபக்கொள்ளை நடத்தலாம். எனவே அவர்கள் தானியத்தைப் பதுக்கிவைத்து விடுகிறார்கள். பொதுஜனங்கள் கண்களில் கண்ட்ரோல் எடுபட்டுவிட்டால் நிறைய தானியம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தோன்றும்படியும் செய்கிறார்கள்.

இந்நிலையில், பெரும்பான்மை மக்களை பாதிக்கும் பஞ்சம்போன்ற பிரச்னைகள் தோன்றுகின்றபோதுதான் மக்களுக்கு சேவை செய்து வருவதாகக் கூறிக்கொள்பவர்களுடைய பொறுப்புணர்ச்சியும், சேவையின் தன்மையும் வெளிப்படுகின்றன. பொதுநலத்தில் அக்கறை காட்டும் பல்வேறு ஸ்தாபனங்கள், தனி நபர்கள் ஆகியோருடைய சேவை அதிகப்படியாக தேவைப்படும் காலமும் அதுதான்.

துரதிர்ஷ்ட வசமாக நம் நாட்டில் ஒரு கடுமையான நெருக்கடி நிலவிவரும் இக்காலத்தில் பொதுஜன ஸ்தாபனங்கள் போதியபடி செயலாற்ற முன் வரவில்லை. நடைமுறையில் அனுபவசாத்தியமான யோசனைகளைக்கூறி அவற்றை மேற்கொள்ளும்படி சர்க்காரை நிர்பந்திக்க அந்த ஸ்தாபனங்கள் முன்வரவேண்டும்.

இரண்டு காரியங்கள் உடனடியாகச் செய்யப்பட்டாகவேண்டும். முதலாவதாக உள்நாட்டு உணவுப் பொருள்களைச் சர்க்கார் சரியானபடி கொள்முதல் செய்ய வேண்டும். மீறிப் பதுக்கிவைத்து, கள்ளமார்க்கெட் செய்பவர்கள்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்விரு காரியங்களையும் திறமையாகச்செய்யவேண்டுமானாலும் பொதுஜன ஒத்துழைப்பையும் பெறுவதற்கு சர்க்கார் விசுவாசமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

உணவுப் பிரச்னை சகல ஜனங்களுடைய பிரச்னையாகும். பஞ்சமும் பட்டினியும் எல்லா கட்சிக்காரர்களையும், எல்லா அரசியல் அபிப்பிராயம் உடையவர்களையும் பாதிக்கிறது. இதைத்தீர்க்க எல்லா கட்சிக்காரர்களும், அரசியல் அபிப்பிராயம் உடையவர்களும் ஏனைய நல்லெண்ணம்கொண்ட பிரமுகர்களும் சேர்ந்த "மக்கள் உணவு கமிட்டி"கள் எல்லா இடங்களிலும் ஏற்படுத்தப்படவேண்டும். அத்தகைய கமிட்டிகளின் உதவியையும் யோசனைகளையும் சர்க்கார் ஏற்கும்படி செய்யவேண்டும்.

"கூட்டுறவு சங்கங்களில் ஏழை நெசவாளர்கள் சேர ஒரு கோடி ரூபாயை மான்யம் ஒதுக்கவும்"

சேலம் ஜில்லா கைத்தறி நெசவாளர்கள் மகாநாட்டில்

டாக்டர் நாயுடுவின் வற்புறுத்தல்.

கைத்தறி ஜவுளித் தொழிலுக்கு நிரந்தரப் பாதுகாப்பளிக்க சர்க்காரில் ஒரு தனி இலாகாவை ஏற்படுத்த வேண்டுமென வற்புறுத்திராசிபுரத்தில் நடைபெற்ற சேலம் ஜில்லா கைத்தறி நெசவாளர் மகாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

மகாநாட்டிற்கு சேலம் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு எம். எல். சி. தலைமை வகித்தார். துவக்கத்தில் ராசிபுரம் தாலூக்கா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஏ. கிருஷ்ணன் கொடியேற்றினார். வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஆர். கே. அரங்கசாமி எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்.

மகாநாடு வெற்றிகரமாக நடைபெற வாழ்த்தி த. நா. கா. க. தலைவர் காமராஜ் நாடார், திருநெல்வேலி வி. எஸ். சங்கர சுப்ரமணிய முதலியார் எம். எல். ஏ., திருச்சி கே. ஏ. பி. விஸ்வநாதம் முதலியோர் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்திகளை காரியதரிசி கே. எஸ். மல்லிகார்ஜுனன் வாசித்தார்.

நெய் தொழிலின் நினைவுக் களஞ்சியம் திருமறை வள்ளுவரின் படத்தை ஜில்லா கலெக்டரின் அந்தரங்கக் காரியதரிசி சூசைப் பிரகாசமும், மூதாட்டி ஔவையின் படத்தை ஜில்லா கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்ட்டார் எஸ். ராஜகோபால ஐயரும் திறந்து வைத்தார்கள்.

தலைவர் நாயுடு பேசுகையில்; ஏழை நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் சேருவதற்கு சென்னை சர்க்கார் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கித் தரவேண்டுமென்றும், வெளிநாடுகளில் கைத்தறி ஜவுளியை விற்பனை செய்யப் போதுமான வசதிகள் செய்து தரவேண்டுமென்றும், கைநெசவுத் துணியின் தரம் மிகவும் உயர்வாக இருக்கும் வகையில் உற்பத்தியாளர்கள் கவனித்துக்கொள்ள வேண்டுமென்றும், கூறினார்.

மகாநாடு பல தீர்மானங்களை நிறைவேற்றியது. அதில் நூலின் விலையை 1946-47ம் ஆண்டு விலைக்குக் குறைக்கும்படியும், பொது மக்கள் கைத்தறி ஜவுளியையே ஆதரிக்கவேண்டுமென்றும் கோரிக்கொண்டும், மாஸ்டர் வீவர்களுக்குப் கூட்டுறவு சங்கங்களுக்கு அளிக்கப்படும் அளவு நூலே தரப்படவேண்டுமென்றும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மிகவும் முக்கியமானவைகளாகும்.

(7ம் பக்கத்தொடர்ச்சி)

போட்டால் எடுப்பதில்லையென்பது தென்னிந்திய மில் முதலாளிகளின் அறிக்கைகளிலிருந்து நன்கு தெரிகிறது.

இதன் காரணமாக கோவை மில்களில் இந்த நெ. நூல்கள் தேங்க ஆரம்பித்துள்ளன. அப்படியிருந்தும் அதே நெம்பர் நூலையே மில்கள் விடாமல் நூற்றுக் கொண்டிருக்கின்றன எனில் இந்தவேடிக்கையை என்னஎன்று சொல்வது? கடைசியாக மில் முதலாளிகள் சர்க்காரை நிர்ப்பந்தித்து தங்கள் கைவசமுள்ள தேக்கத்தை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துகொள்ள அனுமதிக்கும்படி தூண்டும் சதியும் இன்றைய நூல் உற்பத்தி முறையில் அமைந்து நிற்கிறது என்பதை நாம் இச்சந்தர்ப்பத்தில் முன் எச்சரிக்கை செய்கிறோம்.

நூல் உற்பத்தியில் கட்டுத்திட்டமில்லை. அதே போல்வினியோகத்திலும். ஆக இந்த இரண்டு அம்சங்களும் சேர்ந்து நெசவாளர்களைப் பட்டினிக் காளாக்கி உலுக்குகிறது.

இந்த ராஜ்யத்திற்கு 11, 12 ஆயிரம் பேல்கள் வந்துகொண்டிருந்த காலத்தில் தறிகளுக்கு கிடைத்துவந்த நூலின் அளவிற்கும், இன்று 17, 18 ஆயிரம் பேல்கள் வந்தும் அதனினும் குறைந்துவிட்ட அளவே நூல் நெசவாளர்களுக்குக் கிடைக்கிறதெனில்வேடிக்கையாக' இல்லையா

ராஜ்ய சர்க்கார் இதைப்பற்றி ஓர் பகிரங்க விசாரணைவைப்பார்களா எனத் தெரிய ஆசைப்படுகிறோம். நூல் வினியோகத்திற்கு கலெக்டர்களைப் பொறுப்பாக்கிவிட்டு ராஜ்ய சர்க்கார் தப்பிக் கொள்ளப் பார்ப்பது தவறு. அதற்குப் பதில் வினியோக ஊழலைப் பாரபட்சமின்றி பகிரங்கமாக விசாரணை செய்து தவறுகளைத் திருத்திக்கொள்ள முன்வருவதுதான் விவேகமானது.

நூல் நெருக்கடி மிகுந்துள்ள இந்தக் காலத்திலும்—நெசவாளர்கள் மத்தியில் பட்டினிச்சாவு–போன்ற பயங்கரமான சம்பவங்கள் நிகழ்ந்து விட்ட பின்பும், இன்னும் சிலரைச் செல்லப் பிள்ளைகளாகப் பாவித்து கன்சியூமர் கோட்டா ஒதுக்குவதை நினைத்தால் வேடிக்கையாகவே இருக்கிறது. மாகாணத்திற்கு வரும் கோட்டாவில் 5-ல் 1 பாகத்தை விரல் விட்டு எண்ணிவிட முடிகிற சிலருக்கு தூக்கிக் கொடுக்கவேண்டிய அவசியம் என்ன வந்துவிட்டது என்று தான் தெரிய ஆசைப்படுகிறோம்.

அவர்கள் மட்டும் பரம்பரை பரம்பரையாகத் தொழில் செய்தவர்கள் என சர்க்கார் நம்புகிறதா? மற்ற 5லட்சம் தறிகாரர்கள் பூர்வீகமாகத்தொழில் செய்யாதவர்கள் என்று சர்க்கார்எண்ணுகிறதா? இரண்டுமில்லையெனில்ஏன் பாரபட்சம்காட்டவேண்டும்? இதற்குத்தக்க சமாதானம் சொல்ல ராஜ்ய தொழிலமைச்சர் முன் வருவாரா?

தறிகாரன் தன்:தொழில் தேவைக்காகப் போராடினால் மட்டும் சமாதானம் சொல்ல முன்வரும் எல்லோரையுமே கேட்கிறோம்; ஏழைத் தறிகாரர்களது குடும்பங்கள் பட்டினி கிடந்து வாட, எவரோ சிலருக்கு அதிக சலுகை காட்டுவது நியாயமா என்று.

ஆகவே கன்சியூமர் நூல்: கோட்டா முறை ஒழிக்கப்படவேண்டும். பாரபட்சமற்ற கட்டாய நூல் பங்கீடு முறை அமுலுக்கு வரவேண்டும். ராஜ்யங்களுக்கிடையே அமெரிக்கப் பஞ்சு சப்ளை செய்யப்படுவதில் உள்ள தாரதம்மியம் தவிர்க்கப்படவேண்டும். தேவையான நெம்பர் நூலையே நூற்கவும் அது எங்கு தேவையோ அங்கு கொண்டு சென்று வினியோகிக்கவும் வேண்டும் என்ற அடிப்படையான ஆலோசனைகளை நாம் சிபார்சு செய்கிறோம்.

இதை ராஜ்ய சர்க்கார் நடைமுறையில் கொண்டுவர நெசவாளர்களின் ஒன்றுபட்ட அமைதியான கிளர்ச்சிதான் பலன் தருமென்றும் கூறுகின்றோம். ●

கோவில்பட்டியில் கூட்டுறவு நூல் மில் ஸ்தாபிக்கவும்

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மகாநாட்டில் கோரிக்கை.

திருச்சி ஜூலை 28—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மகாநாடொன்று திருச்சி ஜில்லா கூட்டுறவு சங்கங்களின் டிப்டிரிஜிஸ்ட்ரார் ஸ்ரீ சிங்கார ராஜு பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

மாகாண கூட்டுறவு சங்கத்திற்கு பிரைமரி சங்கங்கள் தங்களின் உற்பத்தியில் 25 சத விகிதத்திற்குமேல் கொடுக்கவேண்டுமென்றும், அதற்கு ஆறேகால் சதத்திற்கு மேல் லாபம் வைக்கக் கூடாதென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

அதிக லாபம் கோரி; வந்திருந்த பிரதிநிதிகள் வேண்டியதற்கு பிரதேச மார்க்கெட்டிங் அதிகாரி திருநாவுக்கரசு முதலியார் அது சாத்தியமற்றது எனக் கூறினர். உயர்ரக வெள்ளைத் துணிக்கு 12 அணாவும்; கலருக்கு 13 அணாவும் கூலி கொடுக்கலாமென முடிவுசெய்யப்பட்டது. நடைமுறை வேலைகள் பற்றிய வழக்கமான தீர்மானங்கள் பல நிறைவேற்றப் பட்ட பின்பு,

"தமிழ் நாட்டிற்கென கோவில் பட்டியில் ஒரு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு நூல் மில் நிறுவ சர்க்காரை மகாநாடு கேட்டுக் கொள்கிறது" என்ற தீர்மானம் பிரதிநிதிகளின் உற்சாகமான வரவேற்புக்கிடையே நிறைவேற்றப்பட்டது;

சென்ற இதழ் தொடர்ச்சி.

வாழ்வுதான் ஏது?

அவர்கள் எல்லாம் போன பிறகு முருகன் பரமசிவத்தைப் பேட்டி கண்டான். அவரிடம் தன் கஷ்ட நிலைமையை கல்லும் கரையுமாறு எடுத்துக் கூறினான். ஏதாவது 'ஒன்றோ இரண்டோ' உதவி செய்யுமாறு பல்லெல்லாவற்றையும் காட்டி, கெஞ்சினான்.

இரும்புப் பெட்டியோடு உறவாடி உறவாடி இறுகிப்போன அவருடைய இருதயத்தை இரக்கம் சூழ இயலவில்லை. பொறுமையோடு முருகன் கூறியவற்றை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்து விட்டு இறுதியில் அவர் கையை விரித்தார்.

"இப்போதுதானப்பா அகதிகள் நிதிக்காக அவர்கள் என்னை வந்து பிடித்துக் கொண்டார்கள், அவர்களுக்கு வேறு நூறு ரூபாயை அழுதேன். இப்போது நீ கேட்கிறாய். கேட்பவர்களுக்கெல்லாம் கொடுக்க என்னிடம் அப்படி என்ன கொட்டியா கிடக்கிறது? ஊரில் எத்தனை பேர் இருக்கிறார்கள் அவர்களை விட்டு விட்டு பிச்சைகேட்க என்னிடம்தானா இவர்கள் எல்லாம் வர வேண்டும்?" என்று சலித்துக் கொண்டார் பரமசிவம்.

அவன் உள்ளத்தில் பெருகிய வேதனையூற்று, உள்ளே இருக்க இடமின்றி வெளியே வழிவதை போன்று கண்களில் வழியும் நீரோடு முருகன் வெளியில் வந்தான். வாசலில் பரமசிவத்தின் 3 வயதுப்பெண் தாயார் ஏமாந்திருந்த போது எடுத்துக் கொண்டுவந்த வெள்ளி டம்ளருடன் விளையாடிக் கொண்டிருந்தாள்.

ஒரு நிமிஷம் முருகன் அந்தப் பெண்ணையே உற்று நோக்கினான். அவன் கண்கள் குழந்தையின் முகத்தையும் அதன் கையிலிருந்த வெள்ளி டம்ளரையும் மாறி மாறிப் பார்த்தன. அந்த ஒரு நிமிஷத்தில் அவன் மனதில் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் தோன்றி மறைந்தன. ஆசைக்கும், நியாயத்திற்கும் ஒரு போராட்டம் ஏற்பட்டு ஓய்ந்தது. பட்டினி கிடக்கும் மனைவி மக்களின் முகங்கள் பரிதாபமாக அவனைப் பார்ப்பது போல அவனது மனத்திரையில் ஒரு தோற்றம் தெரிந்து மறைந்தது. பக்கத்திலேயே சிறைக்கம்பிகள் கருத்த கோடுகள் போல காணப்பட்டும் மறைந்தன. இன்னும் எத்தனையோ காட்சிகளையும் அந்த ஒரு நிமிஷத்தில் அவன் கண்டான். அந்த ஒரு நிமிஷத்திலேயே அவன் ஒரு முடிவுக்கும் வந்துவிட்டான்.

கோவை, முத்துச்சோழன்.

மெள்ள அக் குழந்தையை அணுகினான்; "இந்தா பாப்பா அம்மா கூப்பிடுகிறாள்; அந்த டம்ளரை இப்படிக் கொடுத்து விட்டு உள்ளே போ அம்மா மிட்டாய் கொடுக்கத்தான் கூப்பிடுகிறாள்" என்று நயமாகக் கூறினான். கையிலிருந்த வெள்ளி டம்ளரையும் முருகனையும் மாறி மாறி அக் குழந்தை பார்த்தது. என்ன நினைத்ததோ டம்ளரை அவனிடம் கொடுததுவிட்டு உள்ளே ஓடியது.

கைக்கு வெள்ளி டம்ளர் கிடைத்ததும் முருகன் விடுவிடென்று நடையைக்கட்டினான். குழந்தையிடமிருந்த வெள்ளி டம்ளரைப் பற்றிப் பரமசிவமோ அவர்மனைவியோ தெரிந்துகொண்டால் ஆபத்தல்லவா? மார்வாடி கடைக்கு அந்த வெள்ளி டம்ளர் சென்றது. 10 ரூபாய் பெறுமானமுள்ள அந்த டம்ளருக்கு பதிலாக 5 ரூபாய் முருகன் கைக்குக் கிடைத்தது.

ஐந்து ரூபாய்களையும் கொண்டுவந்து மனைவியிடம் கொடுத்தான் முருகன். 'இனிமேல் ஏதாவது கிடைக்க எத்தனை நாளாகுமோ! வெறும் கஞ்சி காய்ச்சிச் சாப்பிட்டுக்கொண்டு எத்தனை நாளைக்குத் தாட்ட முடியுமோ தாட்டிக்கொள்' என்றுகூறினான்.

வயிற்றுப் பசியின்றி அன்றையப்பொழுது கழிந்துவிட்டது. நாளைக்கும் கூட அந்தக் கொடும் நோய்க்கு இடமிருக்காது.

ஃ ஃ ஃ

திண்ணையில் படுத்திருந்த முருகனுடைய மனக்சண் முன்பாக இவ்வளவும் திரைப் படம் போல ஓடியது. வயிற்றுப்பசியை போக்க அவன் திருடன் ஆனான். அவனுடைய அந்தச் செயல் வயிற்றுப் பசியைப் போக்கடித்துவிட்டது. ஆனால் அவன் மனச்சாட்சியை இப்போது குத்திக் கிளறிவிட்டது. அவன் இருதயத்தின் ஒவ்வொரு துடிப்பும் அவனுடைய மனச்சாட்சியின் மீது சம்மட்டிகொண்டு தாக்குவதைப் போல அவனுக்குத் தோன்றியது. "இத்தனை காலம் மானமாக வாழ்ந்தோம். இன்று என் பரம்பரைக்கே இழுக்கைத்தேடிக் கொண்டேன்.

யாரும் மனதாலும் நினைத்தறியாத இழிச்செயலை செய்துவிட்டேன். இதை யாராவது அறிந்தால்? பரமசிவம் இதற்குள் வெள்ளி டம்ளர் எங்கே என்று தேடியிருந்தால்? அதற்கும் என

க்கும் உள்ள சம்பந்தத்தை அறிந்து கொண்டிருந்தால்? ஐயோ கடவுளே எனக்கேன் இந்த புத்தியைக் கொடுத்தாய்?'' என்றெல்லாம் அவன் எண்ணி எண்ணிக் கண்ணீர் உகுத்தான். அச்செயலை அழிக்க மனைவியுடைய உயிரையும் மகளுடைய உயிரையும் தன்னுடைய உயிரையுங்கூட தத்தம் செய்துவிட அப்போது அவன் தயார். ஆனால் நிகழ்ந்ததை வேறாக யாரால் மாற்ற முடியும்?

ஃ ஃ ஃ

அடுத்த தெருவில் ஒரு கோவில் கவனிப்பாரற்றுப் பாழடைந்து கிடந்தது. பணம் படைத்தோர் சிலர் நிதி சேர்த்துக் கோவிலைப் 'புனருத்தாரணம்' செய்திருந்தனர். அன்று விடியற்காலையில் அக்கோவிலுக்கு கும்பாபிஷேகம். நள்ளிரவிலிருந்தே, அவ்விழாவைச் சிறப்பிக்க மேள தாளங்கள், கொட்டு முழக்கங்கள் எல்லாம் நடந்து கொண்டிருந்தன. வாத்திய இசைகள் மட்டும் போதாதென்று ஒலிபெருக்கியின் மூலம் சினிமா இசைத்தட்டு சங்கீதமும் காற்றிலே பரப்பப்பட்டது.

இரவு எல்லாம் உறக்கமின்றி வேதனையால் வெந்து புரண்டு கொண்டிருந்தான் முருகன். ஒலிபெருக்கியின் மூலம் காற்றில் தவழ்ந்து வந்த "ஏழைக்கு ஏது இன்பம்'' என்ற இசைத்தட்டின் கீதம் அவன் உள்ளத்தைத் தொட்டு அவன் நிலையை எடுத்துக் காட்டிற்று. தன்னிலை பெற்றவனைப்போல படுக்கையில் திடீரென எழுந்து உட்கார்ந்தான். இதயக் குமுறலுக்கு சாந்தி ஏற்படச் சரியான வழி ஒன்றைக்கண்டு பிடித்தவனைப் போல ஒரு நீண்ட பெருமூச்சு அவன் நெஞ்சிலிருந்து வெளிவந்தது. எழுந்து வீட்டிற்குள் சென்றான்.

முருகனுடைய வேதனையறியாத அங்கம்மாளும், சரோஜாவும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். எத்தனை இரவுகளுக்குப் பிறகு அடி வயிறு பசியால் கசக்கப்படாது அமைதியுடன் அவர்கள் அன்று தூங்கினார்களோ! பாவம். சாளரத்தின் வழியாக நிலவொளி அவர்களுடைய முகத்தைப் பிரகாசமாக்கிக் காட்டியது. அம்முகங்களை ஆர்வத்துடன் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான் முருகன். கண்களில் வழிந்த நீரைத் துடைத்துவிட்டு திரும்பி வெளியே நடந்தான். நடந்தான்; நடந்துகொண்டே இருந்தான். அதற்கப்புறம் அவனை யாரும் உயிருடன் பார்க்கவேயில்லை.

நாட்கள் சில ஓடின. முருகனைப் பற்றிய கவலையால் அங்கம்மாள் வாடிப்போனாள். அது அவளைப்படுத்தப் படுக்கையிலேயே கிடத்திவிட்டது. பாவம் சரோஜா! அப்பா சென்ற இடம் தெரியவில்லை; அத்தான் சிறைக்குள்; அம்மாவோ படுத்த படுக்கையில் அவளென்ன செய்வாள்?

இந்த நிலையுங்கூட நீடிக்கவில்லை. முருகன் காணாமற்போன 7-வது நாள் பேரிடிபோன்ற செய்தி ஒன்று அவர்களுக்கு கிடைத்தது. பத்திரிகை படிக்கும் வழக்கமுள்ள அவர்களுடையபக்கத்து வீட்டுக்காரர் ஒருவர் வந்து அந்தச் செய்தியைச் சொன்னார். பக்கத்து ஜில்லாவைச் சேர்ந்த ஒரு கிராம குளம் ஒன்றில் இரண்டு நாட்களுக்கு முன்னர் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க மனிதனுடைய பிணம் ஒன்று கிடந்ததாம். அதன் வலது கையில் முருகன் என்று பச்சை குத்தியிருந்ததாம். எங்கிருந்து வந்தவன் என்றும், உறவினர்கள் யாராவது இருக்கிறார்களா என்றும் தெரியாத போலீஸ்காரர்கள் அப்பிணத்தைப் புதைத்துவிட்டார்களாம். பட்டினியால் தற்கொலையாக இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறதென்று பத்திரிகையிலே செய்தி இருந்ததாம்.

பல ஆண்டுகள் முருகனுடன் பழகிய அங்கம்மாளும், சரோஜாவும் பிணத்தைப்பற்றிக் கூறப்பட்ட அடையாளங்களைக் கொண்டு அது முருகன்தான் என்று முடிவு செய்து கொள்வதற்கு நேரம் அதிகமாகவில்லை. அந்தச் செய்தியால் ஏற்பட்ட அதிர்ச்சி அங்கம்மாளின் உயிரையே குடித்துவிட்டது.

சரோஜா உலகத்திலேயே ஆதரிப்பவர் எவருமற்ற அனாதையாக விடப்பட்டாள். அழுதாள்; புலம்பினாள். வேறென்ன செய்ய முடியும் அவளால்?

அக்கம் பக்கத்தவர்கள் அங்கம்மாளை அடக்கம் செய்தனர். ஆதரவற்ற சரோஜாவுக்கு அவர்களே தற்காலிக புகலிடமாகவும் இருந்தனர்.

ஃ ஃ ஃ

வெகு நீண்ட காலம் அரசாங்கம் உதவும் என்ற நம்பிக்கையிலேயும், எப்படியாவது நிலைமை சீர்திருந்தும் என்று எதிர்பார்த்தும், ஏமாற்றமடைந்த நெசவாளர்கள் இனி பொறுக்கமுடியாது என்ற நிலையை உணர்ந்தனர். பொறுத்தது போதும் இனி போராட்டத்தில் இறங்கவேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தனர். தங்கள் போராட்டத்திற்கான நாளும் குறிப்பிட்டு தங்களுக்கு அந்த நாளில் உதவிபுரிய ஏற்கெனவே போராட்டப் பாதையைக் கடைப்பிடித்த.........சங்கத்திடம் ஒருவரை அனுப்பிவைக்கும்படி கேட்டனர். போராட்டத்திற்கு முதல் நாள் ஒருதேர்ச்சிபெற்ற, நெசவாளர் போராட்டத்தில் கலந்து சிறைசென்று அப்போதுதான் விடுதலைபெற்று வந்திருந்த, உற்சாகமும், ஊக்கமும், சிறைசெல்ல அஞ்சா நெஞ்சமும் உள்ள இளம் ஊழியர் ஒருவரை அனுப்பிவைப்பதாக பதிலும் கிடைத்தது.

போராட்டத்திற்காகக் குறிப்பிட்ட நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. இது நாள்வரை காணப்படாத உற்சாகம் நெசவாளர்கள் மத்தியில் காணப்பட்டது. வறுமையும், இன்னலும் ஒழியப்போகும் நாள் நெருங்கிவிட்டது என்பதை ஒவ்வொரு நெசவா

ளியும் உணர்ந்தான். போராட்டத்தின் முடிவில் அடைந்தால் வெற்றி இல்லாவிட்டால் மரணம் என்று அவர்கள் உள்ளங்களில் தோன்றி நிலைத்த உறுதி அவர்களுடைய களையிழந்த முகங்களில் ஒரு பிரகாசத்தை உண்டாக்கியிருந்தது.

போராட்டதினத்திற்கு முதல் நாள் அவர்களுக்கு உதவிபுரிய அனுப்பப்பட்ட ஊழியர் வந்து சேர்ந்தார். அவர் யாருமில்லை. நம் முத்தையன் தான்! போராட்டக் கமிட்டி அவனை ரயில்வே ஸ்டேஷனிலேயே வந்துவரவேற்றது. அவர்களுடன்சென்று நாளைய நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதித்து, மேலும் செய்யப்படவேண்டிய ஏற்பாடுகளைப்பற்றிப் பேசி முடிக்க முத்தயனுக்குச் சில மணிநேரங்கள் பிடித்தன. அவைகளை முடித்துச்சொண்டு அவன் ஆவலுடன் தன் மாமன் வீட்டிற்குச் சென்றான்.

அங்கே அவன் பரிபூர்ணமான மகிழ்ச்சியை எதிர்பார்த்து செல்லவில்லை. என்றாலும், அவன் அங்கே சென்றவுடன் கிடைத்த செய்திகள் அவனுக்கு அளவில்லாத வருத்தத்தை ஏற்படுத்திவிட்டன. அவனைக் கண்டதும் சரோஜா 'கோ' வெனக் கதறி தன் மன எழுச்சிகளைக் காட்டிக் கொண்டாள். அத்தனை துக்கத்திற்கும் இடையில் தன்னைப் பற்றியகவலை எடுத்துக் கொள்ளக்கூடிய ஒருவன் இருக்கிறான் என்ற உண்மை அவளுக்குப் புத்துணர்ச்சியையும் நம்பிக்கையையும் தந்தது.

மனம் விட்டு அவர்கள் பல மணி நேரங்கள் பேசினார்கள். சரோஜா இனி அனாதையல்ல என்றும் அவளைக் காப்பாற்றும் பொறுப்பு தன்னுடையது என்றும் முத்தையன் வலியுறுத்தினான்.

ஃ ஃ ஃ

போராட்டம் துவங்கிவிட்டது. கலெக்டர் காரியாலயத்திற்கு முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக ஆயிரக் கணக்கான நெசவாளர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் ஊர்வலமாகப் போய்க்கொண்டிருந்தனர். **"வேலை செய்ய நூல் கொடு இல்லையேல் சோறு கொடு" "பட்டினி கிடந்து சாக மாட்டோம்"** என்பன போன்ற கோஷங்கள் வானைப்பிளந்தன. ஊர்வலத்தின் முன்னால் முத்தையன் கோஷங்களை எழுப்பிக் கொண்டு நடந்தான். அவன் பக்கத்தில்கோரிக்கைகள் பொறிக்கப்பட்ட அட்டை ஒன்றைத் தாங்கி சரோஜா நடந்தாள். போதிய உணவின்றி வாடி உதிரும் இலையைப் போல பொலிவிழந்து போன அவள் புது வாழ்வு பெறப் போகும் களிப்பில் அசாதாரண உற்சாகம் பெற்றிருந்தாள். ஆழக்குழி விழுந்துபோன அவள் கண்களிலிருந்து நம்பிக்கை ஒளி வீசியது.

ஊர்வலம் பல தெருக்களைத் தாண்டி கலெக்டர் காரியாலயத்திற்கு அருகில் வந்துவிட்டது. இரண்டு போலீஸ் லாரிகள் ஊர்வலத்திற்கு முன்னால் வந்து பாதையை மறித்துக்கொண்டு நின்றன. இரண்டு லாரிகளிலிருந்தும் திபுதிபுவென விசேஷப் போலீசார் கீழே குதித்து அணிவகுத்து நின்றனர். முதல் லாரியின் முன்புறத்திலிருந்து இறங்கிய போலீஸ் இன்ஸ்பெக்டர் மிடுக்காக நடந்து வந்து, போலீஸ் லாரிகளின் குறுக்கீட்டால் முன் செல்ல முடியாது நின்றுவிட்ட ஊர்வலத்தை நெருங்கி,

கடூரமான குரலில் "யார் இந்த ஊர்வலத்தின் தலைவன்?" என்று கேட்டார்.

முத்தையன் இரண்டடிகள் முன்னால் வந்து இன்ஸ்பெக்டருக்கு நேராக நின்றான்.

"நான் தான்" என்றான்.

"இந்த ஊர்வலம் சட்டவிரோதமானது. இதை கலைக்கும்படி நான் உத்தரவிடுகிறேன்" இன்ஸ்பெக்டர் குரலில் அதிகார ஆணவம் ஒலித்தது.

"ஊர்வலம் நடத்துவது எங்கள் உரிமை. அதை யாரும்பறித்துவிட முடியாது" என்றான்முத்தையன்.

இன்ஸ்பெக்டர் அங்கிருந்து திரும்பினார். அணிவகுத்து நின்ற போலீஸ் படையைப் பார்த்து 'சார்ஜ்' என்று உரக்கக் கூவினார்.

பொதுமக்களின் மீது பலாத்காரத்தை உபயோகப்படுத்துவதற்கென்றே பக்குவப்படுத்தி வைக்கப்பட்டிருந்த விசேஷப் போலீஸ் படை, ஊர்வலத்தின் மீது பாய்ந்தது. அவர்களுடைய கைகளிலிருந்த தடிகள், ஊர்வலத்திலிருந்தவர்கள் மீதுபலத்தஓசையை எழுப்பிக்கொண்டு அடிகளாக விழுந்து மீண்டன. 'ஐயோ' 'அப்பா' என்ற கூக்குரலின் மத்தியில் **" அடக்குமுறை ஒழிக"** என்ற கோஷங்களும் எழுந்தன.

முதல் அடி தலையில் விழுந்ததும் முத்தையன் அடக்குமுறை ஒழிக' என்று கோஷித்தான. ஆனால் அவனால் நிற்க முடியவில்லை. மெள்ள கீழே சாய்ந்தான். "ஐயோ அத்தான்" என்று கூவியபடியே அவனிடம் பாய்ந்து வந்த சரோஜாவின் மீது அடுத்து பல அடிகள் விழுந்தன. பல நாள் பட்டினியால்பாதி உயிரை இழந்துவிட்டிருந்த சரோஜா அப்படியேமுத்தையன் மீது சாய்ந்தாள். ஒரு முறை முத்தையனைப் பார்த்தாள். 'அத்தான்' என்று அழைத்தபடியே அவன் மார்பின்மீது தலையைச் சாய்த்தாள்.

பலமான அடிபட்டிருந்தும் உணர்வை இழந்துவிடாத முத்தையன் தன் மார்பின் மீதுசரோஜாவின் தலை பாரமாகக் காணப்பட்டதை உணர்ந்து திடுக்கிட்டான் சிரமத்துடன் மெள்ள எழுந்து அவளைத் தாங்கிப் பிடித்தான். ஆனால் துவண்டு விழுந்த உடல் அவள் உயிர் பறந்து விட்டது என்பதை உணர்த்திற்று முத்தையனுடைய கண்களிலிருந்து வழிந்த நீர் உயிரற்ற சரோஜாவின் அமைதியான முகத்தை நனைத்தது. (முற்றிற்று.)

அவினுசி நெசவாளர்

கூட்டுறவு சங்கம் லிமிடெட்,

நெ. K. 1229.

அவினுசி P. O.

மக்களின் மன நிலையிலேற்படும் மாறுதல்கள் பல அவை உடை அலங்காரங்களில் பிரதிபலிக்கின்றன

அதற்கேற்ப நாங்கள் எங்கள் சொஸைட்டியில் 20, 26, 40, 60, 80 நெம்பர் நூல்களில் கெட்டிச் சாயத்தில் அழகான பார்டருள்ள சேலைகள், கலர் ஷர்ட்டிங்குகள், வேஷ்டி, துண்டு, பீஸ் ரகங்கள் தயாரிக்கிறோம்.

உங்கள் விருப்பம் பூர்த்தியாக ஒருமுறை தேவைக்கு ஆர்டர் செய்து பாருங்கள்.

வர்த்தகர்களுக்கு விசேஷ சலுகை உண்டு.

ஷண்முக முதலியார், காரியதரிசி.

V. சொக்க முதலியார், தலைவர்.

சென்னிமலை கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு சங்கம் லிமிடெட்,

சென்னிமலை P. O.

....

கெட்டிச் சாயம்! அழுத்தமான நெசவு!

எங்களிடம் 20 நெ. முதல் 30 நெ. வரை நூலில் எங்கள் சங்க அங்கத்தினர்களால் தயார் செய்த 5, 6, 7, 7½, 8 கெஜம் 42" 44" கலர் சேலைகளும், வேஷ்டி, துண்டு, காடா ரகங்களும்

விலை சரசமாய்க் கிடைக்கும்.

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு.

M. P. நாச்சிமுத்து, B. A., B. L., தலைவர்.

P. A. ராஜு செட்டியார் & பிரதர்

கடைத்தெரு, கோயமுத்தூர்.

Edited & Published by: M. K. Swamy at 19/22, Muthannankulam Street, Coimbatore